343

சந்திரோதயம்

343
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 NOV 1941

ஸ்ரீமதி கலாநிதி கணபதி

SCANNED

15-11-1941 ★ உள்நாடு விலை அணா 0—1—6

சுதேசி டைப் பவுண்டரியாரின்

‘கணபதி’ புதிய தமிழ் எழுத்துக்கள்

- ★ இதுவரை வெளி வராத அழகான முக அமைப்புள்ளவை
- ★ ஆறு பெரும் பிரிவுகள்; ஒரே குடும்பம் போன்ற இனவரிசை
- ★ 72 பாயின்ட் முதல் 6 பாயின்ட் வரை அமைக்கப்பெற்றவை
- ★ ஏராளமான பொருட்செலவில், பதினைந்தாண்டுகள் உழைப்பின் பயனாக வெளிவந்தவை
- ★ விலையுயர்ந்த புது எந்திர சாதனங்களால் மேனாட்டு முறைப்படி தயாரானவை
- ★ பேரும் புகழும் செல்வாக்கும் படைத்த நூற்றுக்கணக்கான அறிஞர்களின் நன்மதிப்புப் பெற்றவை
- ★ உங்கள் அச்சுவேலைகள் அழகும் கவர்ச்சியும் பொருந்தி விளங்கவேண்டுமானால், எங்கள் ‘கணபதி’ புதிய தமிழ் எழுத்துக்களைவிடத் தகுதியான வேறு எழுத்துக்களைக் காணல் அரிது
- ★ அழகும் சிக்கனமும் இப்புதிய தமிழ் எழுத்துக்களின் தனிச் சிறப்பு

விலை மிக மிக மலிவு

விவரங்கட்குக் கியாட்லாக்குக்கு எழுதவும்

சுதேசி டைப் பவுண்டரி

சிந்தாதிரிப்பேட்டை

சென்னை

குறிப்பு: இந்தப் பிரகடனத்தில் காணப்படும் எழுத்துக்கள் ‘கணபதி’ புதிய தமிழ் எழுத்து வரிசையைச் சேர்ந்த ஒரு சில இனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது

மற்ற வரிசைகளும் இப்படியே இருக்கும்

நாடெங்கும் இணையற்ற வரவேற்பு!

OFFICE OF THE REGISTRAR OF ...
15 NOV 1941
MADRAS

பக்ஷிராஜா பிலிம்ஸ்

ஆர்யமாலா

(காத்தவராயன் கதை)

16உ முதல் 5-வது வாரம்

மதுரை	—	ஸென்ட்ரல் ஸினிமா
கோவை	—	கர்னடிக் டாக்கீஸ்
திருச்சி	—	ராஜா டாக்கீஸ்
சேலம்	—	ஸென்ட்ரல் டாக்கீஸ்
காரைக்குடி	—	ராமவிலாஸம் தியேட்டர்
மாயவரம்	—	சுந்தரம் டாக்கீஸ்
வேலூர்	—	ராக்ஸி டாக்கீஸ்
காஞ்சிபுரம்	—	முருகன் டாக்கீஸ்
புதுவை	—	லக்ஷ்மி டாக்கீஸ்
திருநெல்வேலி	—	நெல்லை டாக்கீஸ் 14உ முதல்
திருச்சூர்	—	ராமவர்மா தியேட்டர் 20உ முதல்
திருவண்ணாமலை	—	மீனாக்ஷி டாக்கீஸ் 22உ முதல்

காசா

காசம், இருமல், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு தலைசிறந்த ஔடதமாகும். (இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி) மலையாளத்தில் அநேகவிதமான வனமூலிகை உலோக வஸ்துக்களைக் கொண்டு முறைப்படி தயார் செய்தது. குணத்தில் சிறந்தது :—

இருமல், காசம், இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார் தடிப்பு, வலி, க்ஷயம் முதலிய வியாதிகளை குணப்படுத்துகிறது.

மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச் செய்து கபத்தை அறவே ஒழித்து, சளியோடு ரத்தம் வருதல், மஞ்சள் நிறமாக வருதல், இளைப்பு காணுதல், பலஹீனம், உடம்பு மெலிதல், ஆயாசம், மூச்சுத் திணறல், கை கால் அசதி, சுவாச காசம், ஜுரம் முதலியவைகளை குணப்படுத்தி, ரத்த சுத்தி செய்யும் என்பதை இதை உபயோகித்து உண்மை அறியவும். ஆண், பெண் யாவரும் பத்தியம் இன்றி சாப்பிடலாம்.

30 நாள் 60 வேளை மருந்து விலை ரூபா 2—8—0

மேகரோக நிவாரணி! தாது விருத்திக்கு நிகரற்றது!!

எலிக்ஸ்ரைன்

மலையாள அஷ்டாங்க முறைப்படி மலையாளத்தில் தயார் செய்தது.

பத்தியம் கிடையாது. ருசிகாமானது. இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்திற்கும் இது அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேக வியாதி, தூர்நீர், மூலச் சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப் படைகள், உடம்பு ஊரல், அஜீரணம், மலச்சிக்கல், கை கால் நோவு, மயக்கம், இடும்பு வலி, மூத்திர நோய், முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, புத்துயிர் அளித்து இல்லற இன்பத்தை அனுபவிக்கச் செய்து, யௌவனத்தைத் தரும்.

இம்மருந்து வெகு பிரயாசையின் பேரில் அதிகப் பணச் சிலவினாலும், அநேக விதமான மலையாள மூலிகை உலோக வஸ்துக்களைக் கொண்டும் முறைப்படி தயார் செய்தது.

இம்மருந்தை யுட்கொண்டு, தங்கள் திரேகத்தில் உள்ள வியாதியை அகற்றுங்கள். உண்மை விளங்கும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20 நாள் மருந்து 40 வேளைக்கு உபயோகிக்கக் கூடியது.
பூரண குணத்திற்குப் போதுமானது.
விலை ரூ. 2—4—0

வள்ளிமணாளன் கம்பெனி,
c/o போஸ்ட் பாக்ஸ் நெ. 1293, G. T. சென்னை.

அதிசீக்கிரம் வெளிவரும்

சாமா நடிக்கும்

RAR OF BOOKS
MADRAS

★ இராஜஸூயம்

(தமிழ்)

மற்றும்

- ஆர். பாலசுப்ரமண்யம்
- வி. எஸ். மணி
- வி. என். சுந்தரம்
- கே. நடராஜன்
- ஜாலி கிட்டு
- ஸி. எஸ். டி. ஸிங்
- ஸி. வி. வி. பந்துலு
- பி. கண்ணையராஜு
- கே. வி. ஜெயகௌரி
- எஸ். ஸி. கோமதி
- எம். எஸ். முருகேசம்
- பி. ஆர். மங்களம்

மற்றும் டலர்.

பாடல்கள் :
பாபநாசம் சிவன் சகோதரர்கள்

ஸ்டுடியோ :
பாரத் மூவிடோன்

பாரத் பிக்சர்ஸ் தயாரிப்பு

ரூ. 10,000 இனாம்!

அமெரிக்கன்

புதிய தங்கம்

தோலா 1-க்கு

ரூ. 2—8—0

யாராவது மேற் குறிப்பிட்ட தங்கத்தை போய் என்று நிரூபித்தால் அவர்களுக்கு ரூ. **10,000** இனாமாக அளிக்கப்படும்.

இந்தத் தங்கத்தை வரவழைத்துக் கொண்டவர்கள் மேன்மேலும் ஆர்டர் கொடுக்கிறார்கள்.

ஸ்ரீ ஹஸாரி லால் சௌலா அவர்கள் பத்தான்கோட்டிலிருந்து எழுதியதை சற்று கவனித்துப் பாருங்கள்:

நீங்கள் அனுப்பிய அமெரிக்கன் புதிய தங்கம் பார்சல் கிடைத்தது. வந்தனம். இது அசல் தங்கம் மாதிரியாகவே இருக்கிறது. இதற்கும் அசல் தங்கத்திற்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. மறு தபாலில் இன்னும் 6 தோலா அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மேன்மேலும் ஆர்டர்கள் அனுப்புகிறேன்.

இந்தத் தங்கம் மாற்றுக் கல்லில் உறைத்தால் அசல் தங்கம் மாதிரியே காட்டுகிறது. இதை கம்பியாகவும் நீட்டலாம்; தகட்டாகவும் அடிக்கலாம். சகல ஆபரணங்களும் இதனால் செய்யலாம்.

1-தோலா ரூ. **2—8—0**-க்கு கொடுத்து வருகிறோம்.

3-தோலா ரூ. **7**· 6-தோலா ரூ. **13**. 10-தோலா ரூ. **20**

உங்களுக்கு திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.
இன்றே ஆர்டர் கொடுங்கள்.

முக்கிய கவனிப்பு:—3 தோலாக்களாவது 6 தோலாக்களாவது வரவழைத்துக் கொள்பவருக்கு தபால் சார்ஜ் இனாம். 3 தோலா, 6 தோலாக்களுக்கு மேல் ஆர்டர் கொடுத்தால் பாரிஸ் கோல்டை கொண்டு தயாரித்த ஒரு ஜதை வளையலும், ஒரு ஜதை காது வளையமும் இனாம்.

Sole Agents: **AMERICAN TRADING Co., (3.T.M.)**
JULLUNDUR CITY.

சந்திரோதயம்

PHONE 2572

60, தம்புசெட்டி தெரு + மதராஸ்.

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" — குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 6	சென்னை 1941ஆ நவம்பர்மீ 15உ	முத்து. 8

பொருளடக்கம்

			பக்கம்
ரஷியாவின் நிலைமை	...	...	6
என்ன சங்கதி?	...	...	9
பார்வைக்கு வந்தவை	...	"தேனி"	13
நக்ஷத்திர உலகிலே	...	...	...
விமர்சனம்	...	...	...
வீண்வம்பு	...	"சல்லடை"	...
உடைந்த படகு	...	"நாதன்"	17
அதிருஷ்ட நொடி	...	ஏ, எம். ரஷீத்	23
குமுதம்	...	வி. எஸ். மணியன்	26
அகஸ்தியரின் திகைப்பு	...	எஸ். கே. அருணாசலம்	29
நாய் காட்டிய புதையல் (பாப்பாப் பகுதி)		எம். எஸ். ஜி.	33
மௌன ரகஸியம்	...	எஸ், சுப்ரமணியன் எம். ஏ.	35
ஊர் சிரிக்க	...	[எஸ். எம். பழனியப்பன்	38

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவையாரையும் குறிப்பிடுவனவல்ல.

ரஷியாவின் நிலைமை

'கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி' என்று சிலரைப்பற்றி சிலசமயங்களில் சொல்லப்படுவ துண்டு. அதைப் போலவே தானுண்டு தன் வேலையுண்டு, என்றிருந்த ரஷியாவை ஜெர்மனி வெறும் பிள்ளைப் பூச்சி என்று எண்ணி விட்டது.

அதனாலேயே ஜெர்மனியர்கள் $1\frac{1}{2}$ மாதகாலத்தில் ரஷியாவை ஆக்ரமித்துக் கொள்ளலாம் என்று மனப் பால் குடித்தது. ஆனால் ரஷியர்கள் தாங்கள் பிள்ளைப் பூச்சிகளல்ல, தேள்கள் தான் என்பதை ஜெர்மனியருக்குக் காட்டிவிட்டனர்.

போர் ஆரம்பித்து விட்டபின் ரஷியாவில் குழப்பங்களும், கோளாறுகளும் ஏற்பட்டு தங்களுக்கு சாதகம் ஏற்படும் என ஜெர்மனியர் எண்ணினர். ஆனால் நாஜிகளின் ஆக்ரமிப்பு ரஷியாவை பலஹீனப் படுத்துவதற்கு பதில் நன்கு வலுப்படுத்தி யிருக்கிறது.

ரஷியாவில் முன்னேறிய ஜெர்மன் மின்னல் படைகளை ரஷியப் படைகள் மின்னலைப் போல் மறையச் செய்தன. மேலும் மேலும் விரோதிகள் கொண்டு வந்து குவிக்கும் படைகளையும் ரஷியர்கள் முடமாக்கி வருகின்றனர். எங்கெல்லாமோ பலித்து வந்த 'மின்னலடிப்'ப் போர் ரஷியாவில் தோற்றுவிட்டது. இதற்குக் காரணம், பிரான்ஸிலே நடந்ததுபோல் புரட்சியும், ஐந்தாம்படை வேலையும் ரஷியாவில் இல்லாதது தான்.

அதோடு ஜெர்மனி நினைத்ததுபோல் பிரிட்டனும், அமெரிக்காவும் ஜெர்மனியின் வலையில் விழாதிருப்பதுவும் ஒரு காரணமாகும்.

ஜெர்மனியர் தங்கள் நாட்டை விட்டு அந்நிய நாட்டில் வந்து போர் புரிகின்றனர். இங்குதான் அவர்கள் தங்கள் பின்அணியை நிறுவ வேண்டும்.

ஆனால் அவர்கள் நிறுவும் பின் அணிகளை யெல்லாம் கொரில்லா படையினர் நாசம் செய்து வருகின்றனர். ஜெர்மன் சைன்யங்களின் சப்ளை மார்க்கங்களைக் கோளாருக்கி சப்ளைகள் வந்து சேராதபடி குந்தகம் விளைவித்து வருகின்றனர்.

ஜெர்மனியருடன் ரஷியர்கள் இவ்வளவு தைரியத்துடனும், துணிச்சலுடனும் சண்டை செய்து வந்தும் லிதுவேனியா, எஸ்தோனியா, மால்டேவியா, லாட்வியா முதலியவைகளை எதிரிகள் எப்பம் விட்டு விட்டனர். அனேக இடங்களில் ஜெர்மனியர் அக்ரமமாக முன்னேறினர்; ரஷியர்கள் சாமர்த்தியமாகப் பின்வாங்கினர்!

இப்படி ரஷியர்கள் சாமர்த்தியமாகப் பின்வாங்கும் காரணத்தைப் பற்றியும், இதுவரை நடந்த ரஷிய—ஜெர்மன் யுத்தத்தின் தாாதரங்களைப் பற்றியும் சமீபத்தில் ஸ்டாலின் தன் பிரசங்கத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அதாவது ஜெர்மனியர் தற்காலிகமாக சிறிது சிறிதாக வெற்றியடைந்து வருவதற்குக் காரணம், அவர்களுக்கு விமானங்களும், டாங்குகளும் ஏராளமாயிருப்பதும், அந்த சாதனங்கள் ரஷியர்களுக்குக் குறைவா யிருப்பதுந்தான் என்பது ஸ்டாலினின் எண்ணம்.

யந்திர பலம் பொருந்திய இந்தக் காலத்தில் விமான—டாங்குகளின் ஆதரவு இல்லாமல் வெறும் காலாட்படைகளால் மட்டும் விரோதியை மடக்குவது சிரம சாத்தியமான காரியம்.

இது தெரிந்தே ஜெர்மனியர்கள் ஏராளமான டாங்குகளை உற்பத்தி செய்கின்றனர். இவர்கள் செய்வது மட்டுமின்றி செக்கோஸ்லோவேகியா, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களும் ஜெர்மானிக்காக டாங்குகளை விருஷ்டி செய்கின்றன.

இந்த விஷயத்தை ஸ்டாலின் தன் பிரசங்கத்தில் குறிப்பிட்டதற்கு அர்த்தமில்லாமல் போகவில்லை. அதாவது ஜெர்மனிக்குப் பல தேசங்கள் ஒத்தாசை செய்கின்றன வென்றும், ரஷியாவுக்கும் அம்மாதிரி சில தேசங்கள் ஒத்தாசை செய்தால் எதிரிகளை இதற்குள் அவர்கள் சொந்த இடத்திற்கோ—அல்லது யமபுரிக்கோ அனுப்பியிருக்கலாம் என்றும் ஸ்டாலின் கருதுகிறார்.

ஸ்டாலின் கருத்துப்படி இப்பொழுது ரஷியாவுக்கு உதவக் கூடிய தேசங்கள் பிரிட்டன்—அமெரிக்கா ஆகிய இரண்டு தேசங்கள்தான்.

இதை ஸ்டாலின் தன் பிரசங்கத்தின் இறுதியில் தெளிவாகவே கூறிவிட்டார். "நமக்கு டாங்குகள், விமானங்கள் உதவி செய்வதாக சமீபத்தில் நடந்த மாஸ்கோ மகாநாட்டில் பிரிட்டனும், அமெரிக்காவும் வாக்குறுதியளித்திருக்கின்றன.

"அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா ஆகிய நாடுகள் ஒன்றுகச் சேர்ந்து இயந்திரங்களை உற்பத்தி செய்தால் ஜெர்மனியை விட மும்மடங்கு நம் கை ஓங்கும். நாஜி ஏகாதிபத்தியம் அழிந்தேவிடும்" என்றார் ஸ்டாலின்.

ஸ்டாலின் கூறுவது உண்மையான விஷயமே. ஜெர்மனியின் தற்செயலான முன்னேற்றத்துக்கும், ரஷியர்களின் தயக்கத்துக்கும் இருதாரத்தாரிடம் உள்ள டாங்கு—விமானங்களின் வித்யாசந்தான் என்பது தெளிவாகிறது.

ஆகவே பிரிட்டனும், அமெரிக்காவும் உடனே ரஷியாவுக்கு வேண்டிய டாங்குகளை உற்பத்திசெய்து தருவது மிகவும் முக்கியமாகும். ஏற்கெனவே இவைகள் சப்ளை செய்துதான் இருக்கின்றன. எனினும் யுத்தம் போகும் வேகத்திற்கு சப்ளை இன்னும் அதிகரிக்கப்படுவது அவசியம்.

ரஷியாவுக்கு யுத்த தளவாடங்களை விரைவாகவும், அதிகமாகவும் அனுப்புவதில் சிரமமும், பணவிரயமும் ஏற்படலாம். ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாது உதவினால் பின்பு அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் அளவற்ற நன்மைகள் இருக்கின்றன என்பது நிச்சயமான விஷயம்.

ரஷியா, அமெரிக்காவையும், பிரிட்டனையும் வெகுதூரம் நம்பியிருக்கிற தென்பது, ஸ்டாலின் தன் பிரசங்கத்தின் கடைசியில், ஐரோப்பாவில் ரஷியாவுக்கு சாதகமாக 2-வது போர்முனை ஒன்று இருக்கவேண்டுமென்று கூறுவதிலிருந்து தெரிகிறது.

ஸ்டாலின் தன் நேச நாடுகளிடம் யுத்த தளவாடங்களை மட்டும் உதவி கேட்கவில்லை. அவர் இரண்டாவது போர்முனை வேண்டுமென்பது சைன்ய உதவிகூட வேண்டும் என்பதையே குறிக்கிறது.

இந்த விஷயத்தில் ரஷியாவுக்கும், பிரிட்டனுக்கும் அபிப்ராயபேதம் இருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் பிரமுகர்களான லார்ட் ஹாலிபாக்ஸ், மேஜர் ஆலன்முரே முதலியோர்களும் இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவது முடியாதகாரியம் என்று கூறியிருக்கின்றனர்.

ஏனெனில் ஐரோப்பாவில் ரஷியாவைத் தவிர இதர நாடுகளில் கால் வைப்பதற்குக்கூட இடம் கிடையாது; எல்லாம் ஜெர்மன் பக்கம் சேர்ந்திருக்கின்றன.

கடல் கடந்து துருப்புக்களை இறக்கி சண்டை செய்வதோ ரொம்பக் கஷ்டமானவேலை. எனவே ஸ்டாலின் கருத்துப்படி ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவது முடியாததொன்று என்று தெரிகிறது.

இது ரஷியாவுக்கும் தெரிந்திருக்கலாம். எனினும் தனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்தின் கோளாறினாலேயே இரண்டாவது போர்முனை சாத்தியம் என ரஷியா எண்ணிவிட்டது.

ரஷியாவில் 2-வது போர்முனை இல்லாவிட்டாலும், சாத்தியமான வேறு இடங்களிலாவது ஏற்படுத்தி ரஷியாவுக்கு ஒத்தாசை செய்யலாம். அதற்கும் பிரிட்டனுடைய சௌகர்யங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுவது முக்கியம்.

எப்படியும் ரஷியாவுக்கு பிரிட்டன்—அமெரிக்கா இருதேசங்களின் உதவி இன்றியமையாதது என்று தெரிகிறது. இந்த இரு தேசங்கள் செய்யும் ஒத்தாசையின் அளவைப் பொறுத்தே எதிரிகளின் முடிவும், உலக சமாதானமும் இருக்கிறது. ஆகவே சாத்தியமான அதிகப்படி அளவுக்கு பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷியாவுக்குப் பலவகைகளிலும் உதவி செய்வது நலம். அப்பொழுது தான் உலகில் நாஸிஸ, பாஸிஸப் பேய்களின் வர்க்கம் பூண்டோடு அழியும்.



அரசியல் ஆச்சரிய ஆருடம்

அஞ்ஞாதவாசம் செய்து வரும் ஸ்ரீ சுபாஷ் சந்த்ரபோஸ் எங்கிருக்கிறார், என்ன செய்து கொண்டிருக்கிறார்! என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருக்கலாம்.

ராஜாங்க சபையிலே சுபாஷைப் பற்றி ஒருவர் ஆருடம் கேட்டார். அதற்கு ஒரு அரசியல் ஜோதிடர் அற்புதமாக ஆருடம் சொல்லிவிட்டார்.

அதாவது சுபாஷ்போஸ் ரோம் அல்லது பெர்லினில்தான் இருக்கிறாராம். இப்படி இரண்டிடங்களில் சந்தேக—நிச்சயமாக வசித்து வரும் சுபாஷுக்கு உத்தியோகம் 5-ம் படை வேலையாம். ஒருவேளை ஜெர்மனி மீது இந்தியா படையெடுத்தால் அச்சு நாடுகளுக்கு அவர் உளவு சொல்லிக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறாராம்.

யுத்தம் மும்மரமாக நடக்கையில் அவர் சர்க்கார் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு எதிரி நாட்டுக்குப் போய் விடுவது ஒரு ஆச்சரியம்.

அப்படி அங்குபோயும் அவர் 5-ம் படையில் சேர்ந்திருப்பதாகக் கூறுவது அதனிலும் ஆச்சரியம்.

இந்த ஆச்சரியமான ஆருடம் பொய்த்துவிட வேண்டுமென்பதே நமது அவா!

தொட்டில் பழக்கம்

'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பார்கள். அதுபோலவே சங்கீத வித்வான்களுக்குத் தெலுங்குப் பாடல்கள் ஒரு தொட்டில் பழக்கமாய் விட்டது. ஆகவே அவர்கள் இடையில் அப் பழக்கத்தை விடுவது சிரமசாத்தியமான காரியந்தான்.

இதனால் தான் சங்கீதவித்வான்களுக்குப் பழகிப்போன தெலுங்குப் பாடல்களில் இனிப்பும், தம் சொந்த தாய்பாஷையில் கசப்பும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கசப்பினாலேயே ஸ்ரீ அரியக்குடி ராமானுஜையங்கார்கூட 'முழுதும் தமிழ்ப் பாட்டுகளே வேண்டும் என்று யாராவது நிபந்தனை போட்டால் அந்தக் கச்சேரியை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன்' என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். ஆனால் தமிழ்ப் பாட்டுகளையே அதிகம் பாடாத வித்வான்களை கச்சேரிகளுக்கு அழைப்பதில்லை என்று தமிழர்கள் முடிவு செய்துவிட்டால் அப்புறம் இவர் என்ன செய்வார் என்று தெரியவில்லை.

வித்வான்கள் தமிழ்ப் பாடல்களை வெறுப்பதனால் அவர்களுக்குத் தமிழ் மீது துவேஷம் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் தெலுங்கு பாடியே வயிறு வளர்த்து வந்துவிட்டனர். இனி அவர்கள் தமிழில் பயிற்சி

செய்வது சிரமம். இதனாலேயே ஸ்ரீ அரியக்குடியும் அம்மாதிரி கூறியிருக்க வேண்டும்.

எனினும் கூடிய விரைவில் வித்வான்களுக்கு நல்ல புத்தியை பகவான் கொடுத்து, கச்சேரிகளில் தனித் தமிழ் முழங்குவதை விரைவில் எதிர்பார்க்கலாம்.

சவர்க்கார் கடிதம்

நெல்லூரில் ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நடந்த தகராறு விஷயமாக இந்து மஹா சபைத் தலைவரான சவர்க்கார், ஸ்ரீ பி. வரதராஜுலு நாயுடுவுக்கு ஒரு விநோத மான கடிதம் எழுதியிருக்கிறார்.

“சிறையிலிருந்து விடுதலையான காங்கிரஸ் தலைவர்கள், இழிவான முறையில் முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுக்க ஹிந்துக்களை இணங்கும் படி செய்ய முயல்கின்றனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது. உடனே நெல்லூர் ஹிந்து மஹா சபைத் தலைவர்களுக்கு எழுதும்படியும், முஸ்லிம்கள் மீது வெற்றிகரமாக நடத்திவரும் பொருளாதார பகிஷ் காரத்தைத் தளராது நீடிக்கும்படி இந் துக்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி யும் தங்களுக்கு உத்தரவு போடு கிறேன்.

நமது பிரஜா உரிமைகளைக் காங் கிரஸுக்கு விட்டுக்கொடுக்கக்கூடாது. ஹிந்துக்கள் சார்பில் விட்டுக்கொடுத்து சமரஸம் செய்துகொள்ள காங் கிரஸுக்கு உரிமையே கிடையாது; ஹிந்து மஹா சபைக்குத்தான் ஹிந் துக்கள் சார்பில் எல்லா உரிமை களும் உண்டு.....” என்பதுதான் கடிதத்திலுள்ள விநோத விஷயம்.

ஹிந்துக்களின் முழு ஆதரவு இல்லாதிருந்தும் தாமே ஹிந்துக் களுக்குப் பிரதிநிதிபோல் பாவித்துக் கொண்டு அதிகாரங்கள் நடத்துவது ‘பாழூருக்கு நரியே ராஜா’ என்பது போல் இருக்கிறது.

மேலும் அவருடைய கடிதம் ஹிந்து முஸ்லிம் சண்டையை அபி விருத்தி செய்வது போலவும், காங் கிரஸுடன் தாயாதி சண்டை பிடிப் பதுபோலவும் இருக்கிறதே யொழிய உண்மையில் ஹிந்துக்களுக்கு நன்மை செய்வதாயில்லை.

சுயநலத்துக்காக நம் நாட்டில் யார் வேண்டுமானாலும் ஆட்டம் போட லாம். ஆனால் ஹிந்துக்கள் அவர்கள் வலையில் விழமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

வெளியேற்றம்

ராஜாங்க சபையிலிருந்து மூன்று லீகர்கள் வெளியேறிவிட்டனர், என்று செய்தி கிடைத்திருக்கிறது. இதற் குக் காரணம் ராஜாங்க சபையில் கூட்டம் அதிகமாய்விட்டதென்றோ, உட்காருவதற்கு நாற்காலிகள் இல்லா மல் போய்விட்டதென்றோ யாரும் எண்ணக்கூடாது.

சர்க்காரின் கொள்கையைக் கண் டிப்பதற்கு அறிகுறியாகவே அவர்கள் ‘வாக் அவுட்’ செய்திருப்பதாகத் தெரிகிறது.

வைஸிராயின் நிர்வாக சபை விஸ் தரிப்புத் திட்டத்தில் லீகர்கள் ஏமாற்ற மடைந்துவிட்டார்களென்றும், இன் னும் முக்கியமான இலாக்காக்கள் இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட வில்லையென்றும் அந்த லீகர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் வெளிநாட்டு இந்தியர் இலாகாவுக்கு ஆனே நிய மிக்கப்பட் டிருப்பது பொருத்த மில்லையென்றும், தற்காப்பு இலாகா வில் எங்கும் இருக்க அவர்களுக்கு இடமில்லையென்றும், இது இந்தியா வின் அடிமைத் தனத்துக்குப் பாது காப்பென்றும் லீக் கட்சியின் தலைவ ரான இமாம் பிரசங்கம் செய்தாராம்.

லீகர்களின் இந்த வெளியேற்றம் அவர்கள் எங்கிருந்தாலும், யாருட னாவது குதர்க்கம் செய்துதான் தீருவார்கள் என்று காட்டுவதைத் தவிர வேறில்லை.

பலாத்காரம் வேண்டும்

'சொல்லிக் கொடுத்த வார்த்தையும், கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாட்களுக்கு?' என்று பழமொழி உண்டு. அதேபோல் அரசியலில் உள்ள சிலருக்கு அஹிம்ஸையைப் பற்றிச் சொல்லிக்கொடுத்த வார்த்தைகளும் சில நாட்களில் மறந்து விடுகின்றன. அதன் பின் அவர்கள் தும்பு அறுபட்ட காளைபோல் தம் வழியிலே செல்ல ஆரம்பித்து விடுகின்றனர்.

அப்படிப் பட்டவர்களில் ஸ்ரீ சத்யமூர்த்தியும் ஒருவராவர். சிறையிலிருந்து வெளி வந்ததிலிருந்து அவர் எதையெதையோ உபதேசித்துக் கொண்டிருந்தார்.

கடைசியில் அவர் அஹிம்ஸையின், ஆணி வேரையே கெல்லி யெறியப் பார்க்கிறார். இந்தியாவின் மீது யாராவது படையெடுத்து வந்துவிட்டார்களானால் அஹிம்ஸை மூலம் அவர்களைத் தடுத்துவிட முடியுமா, என்று அவர் கேட்கிறார்.

அப்படியானால் இந்தியர் இப்போதிருக்கும் நிலையில் பலாத்காரம் செய்துதான் எதிரியைத் தடுக்க முடியுமா? முடியாது; ஏனென்றால் முதலில் ஹிந்துக்களுக்கு ஆயுதம் வைத்துக் கொள்ளக்கூட உண்மையான உரிமையில்லை. அப்படி அது இருக்கிறதென்று வைத்துக்கொண்டால்கூட இந்தியர் கையில் அதிகாரம் கிடையாது.

சத்யமூர்த்தி சொல்வது ஒருவேளை காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தபின் என்று வைத்துக் கொள்வதாயிருந்தால் அது 'அடுத்த வருடம் தாலி கட்டுகிறேன், கழுத்தே சுகமாயிரு' என்ற பைத்தியகாரத் தனத்தைப் போல்தான் ஆகும்.

எப்படிப் பார்த்தாலும் மூர்த்தியன் யோசனைகளில் கீர்த்தி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் அவர் தன் போக்குப்படி போய்க்கொண்டுதான் இருப்பார்.

போய்க்கொண்டிருக்கட்டும்; ஆனால் அஹிம்ஸை கூடாது. பலாத்காரம் தான் வேண்டும் என்பதை நாட்டில் பிரசாரம் செய்வதற்குக்கூட அவர் எங்கே பலாத்காரத்தைக் கையாண்டு விடுவாரோ என்று பயமாயிருக்கிறது.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

9—5—'38-ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்.

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர் புஜண்டர், சாஸ்திர நிபுணர், ஜாதகம் கணிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம், விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ் (ஒவ்வொரு காரியம் சித்தி பெறும் சந்திரன் நாட்களும் மணிக்கு மணி பலாபலன் அட்டவணையுடன்) மற்றும் பலன்கள் மாதவாரியாக எழுத ரூ. 3. ஓர் திசைக்கு புத்தி பலன் ரூ. 3. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் **N. V. சுப்பிரமணியம், J. M. & J. A.,**

நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P. O. (சென்னை)

அதிர்ஷ்டம்

ஒரு போஸ்ட் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரையும், உங்கள் முழு விலாசத்தையும் எழுதி அனுப்பினால் உங்களுக்கு உடனே ஒரு V. P. P. ரூ. 1—8—0-க்கு அனுப்பப்படும். அதில் உங்களுக்கு, எதிர்கால 12 மாதங்களுக்கு மாதவாரியாக பலாபலன்களும், வியாபாரத்தில் லாபம், நஷ்டம், விருத்தி, வேலையில் உயர்வு, தாழ்வு, புத்திர சந்தானம், கலியாணம், சந்தோஷம், கெட்ட நக்ஷத்திரத்தால் ஏற்படக்கூடிய கெடுதல்கள், அவைகளிலிருந்து தப்புவிக்க மார்க்கங்கள் முதலியவைகள் சொல்லப்படும். ஒருதரம் பரீக்ஷித்தால் எங்களுடைய ஜோதிஷத்தின் மகிமை தெரியும். திருப்தி இல்லையேல் பணம் கண்டிப்பாய் வாபஸ் செய்யப்படும்.

PROFESSOR BENGAL MESMERISM HOUSE,
(CTM) JULLUNDUR CITY

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்
12,58,400 ஜனங்கள் போற்றுவது
ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. 2.

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)
வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

ஒரு மாதத்திற்கு மட்டும் சரஸ விலை
100 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு விலை ரூ. 5-10-0

கார்டு படங்கள்

கணவன் மனைவியின் அந்தரங்கமான நிலைகளைக் காட்டும் அழகான தோற்றங்களுடைய அபூர்வமான ஸெட், தபால் சார்ஜ் உள்பட 100 கார்டுகளடங்கிய ஸெட் 1-க்கு ரூ. 5/10/- பொறுக்கி யெடுத்த 25 கார்டுகள் கொண்ட ஸெட் 1-க்கு தபால் சார்ஜ் உள்பட ரூ. 2/10/-. ஒரு சமயத்தில் 25 கார்டுகளுக்கு குறைவாக அனுப்புவதில்லை. பர்மா, சிலோன், மலேயா வாசிகள் முழு துகையையும் அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.

French Photo Supply Co., (CTM) Jullundur City.

பார்வைக்கு வந்தவை

டாக்-எ-டோன் (தீபாவளி மலர்)

ஆசியரிர் :—என். ஸ்ரீனிவாசன், M., A,
22, சாமிசெட்டி தெரு, மௌண்ட்ரோடு, சென்னை.

சினிமாக் கலையின் உத்தாரணத்திற்காக இதுவரை எத்தனையோ பத்திரிகைகள் தோன்றின. அவைகளில் எத்தனையோ, தங்களைத் தாங்களே உத்தாரணம் செய்துகொள்ள முடியாமல் மறைந்துவிட்டன.

ஆனால் டாக்—எ—டோன் என்ற ஆங்கிலப் பத்திரிகை சென்ற 5 வருடங்களுக்குமேலிருந்து சலியாத ஊக்கத்துடன் அச்சம், தயை, தாக்ஷண்யம் அற்ற முறையில் தொண்டாற்றி வந்திருப்பது சினிமா உலகின் அதிருஷ்டமேயாகும்.

இப்போது வெளிவந்திருக்கும் அதன் தீபாவளி மலர் பலவிதத்தும் மேன்மை பொருந்தியிருக்கிறது. பற்பல அரிய கட்டுரைகளும், படங்களும் அடங்கியிருக்கின்றன.

ஸ்டார்

ஆசிரியர் :—டி. பி. ராமசாமி,
5, ராபர்ட்சன் ரோடு, பிரேசர் டவுன், பங்களூர்.

சினிமா உலகத்திற்கு ஆங்கில பாஷையில் தொண்டியற்ற இந்தப் புதிய பத்திரிகை வந்திருக்கிறது. முகப்புப் படத்தில் நக்ஷத்திர ராணியான எம். எஸ். இன் போட்டோ தோற்றமளிக்கிறது.

உள்ளே சினிமா சம்பந்தப்பட்ட கதை, கட்டுரை, விமர்சனம் முதலியவைகள் எளிய நடையில், சிறந்த முறையில் எழுதப் பெற்றிருக்கின்றன.

அழகிய முறையில், ஓரணு விலையில் வெளிவந்திருக்கும் இப்பத்திரிகை ரஸிகர்களுக்குத் திருப்தியைக் கொடுக்குமென்றே நம்புகிறேன்.

இராசை தோத்திர மஞ்சரி

பிரசுரிப்போர் :—S. P. இளங்கோ சேரமான்,
"அலோர் பவனம்" இராசீபுரம், சேலம்.

இந்த நூலில் இராசீபுரத்தின் கோவில்களில் எழுந்தருளியிருக்கும் சகல கடவுள்களின்மீதும் பக்திரஸம் தோன்றப் பாடப்பெற்ற பாடல்கள் அடங்கியுள்ளன. பக்திமான்களுக்கு இப்புத்தகம் மிக உபயோகமாயிருக்கும். இதை விருஷ்டித்தவர் காலஞ் சென்ற, இராசீபுரம் பொன்முடி. எஸ். பொன்னுசாமி செட்டியார் ஆவர். இதன் விலை அணு இரண்டு.

ஜீவ நாகரத்தினம்

ஜீவ நாகரத்தினம் புக்டிபோ,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

புத்தகத்தின் பெயரைப் பார்த்த மாத்திரத்தில் இது ஜீவன்களுக்கு ஒரு ரத்தினம்போல் விளங்குமென்று தோன்றுகிறதல்லவா! அது உண்மைதான்.

மானிட இல்வாழ்க்கைக்கு இது ஒரு பொக்கிஷம் போலவும், சஞ்சீவி போலவும் உதவக்கூடியது. ஸ்திரீ புருஷ ரகஸியங்களைப் பற்றியும், மண வாழ்க்கையின் மர்மங்களைப் பற்றியும், மானிடர், தீர்க்காயுள், நல்ல புத்திர சந்தானம் முதலியவைகளைப் பெறுவது எவ்வாறு என்பது பற்றியும் இப்புத்தகம் வெகு தெளிவாகச் சொல்கிறது. ஆண் பெண் ஒவ்வொருவரும் இதைப் படிப்பது அவசியம். இப்புத்தகத்திலுள்ள தமிழ் நடை கொச்சையாக இருப்பதுதான் வருந்தத்தக்கது.

இசை விருந்து

எழுதியவர்: ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.
கிடைக்குமிடம்: அன்பு நிலயம் இராமச்சந்திரபுரம், திருச்சி.

சங்கீதக் கச்சேரிகளிலே தமிழ் பாடல்களை அதிகம் பாடவேண்டும் என்று சில பெரியார்கள் தீர்மானம் செய்தனர். வேறு சில பெரியார்கள் "அது முடியாத காரியம். தமிழிலே நல்ல சாகித்யங்கள் கிடையாது. எனவே தமிழில் பாட்டுப் பாடுவது சிரமம்" என்று குதர்க்கம் செய்தனர்.

அப்படிக் குதர்க்கம் செய்தவர்களின் வாயை அடக்குவதற் கென்றே இந்த 'இசை விருந்து' என்ற புத்தகம் வெளிவந்திருக்கிறது.

இப்புத்தகத்தில் சுவாமி சுத்தானந்த பாரதியாரால் புனையப்பட்ட 20 பக்தி ரஸப்பாடல்கள் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு பாடலும் சங்கீதத்துக்கு ஒத்த வகையில், ராக-தாள அமைப்புடன்—இனிய மெட்டுகளில் அமைந்திருக்கிறது.

சங்கீதக் கச்சேரிகளில் பாடுவதற்குத் தமிழ் பாடல்கள் இல்லையே என எங்கும் வித்வான்கள் இனி இந்த இசை விருந்தை உபயோகப்படுத்திக்கொள்வார்கள் என நம்புகிறேன்.

"ரீட்டா" (கூந்தல் தைலம்)

விட்டோ கம்பெனி, 131, பிராட்வே, மதராஸ்.

வாலிப வயதில் தலைவழுக்கை ஏற்பட்டவர்கள் தங்கள் நண்பர்களாலும், உறவினர்களாலும் வாலிபக் கிழவர்கள் என்று நையாண்டி செய்யப்படுவதையும், அதனால் அவர்கள் வெட்கமும், வருத்தமும் அடைவதையும் நாம் தினசரி பார்த்து வருகிறோம்.

ஆனால் தலைவழுக்கை ஏற்பட்ட வாலிபர்களும், யுவதிகளும் இனிமேல் வெட்கமோ, வருத்தமோ படவேண்டிய அவசியமில்லாதபடி "ரீட்டா" செய்து விட்டது.

'ரீட்டா' என்பது ஒரு கூந்தல் தைலம். தலைமயிருக் கேற்படும் சகல வியாதிகளுக்கும் "ரீட்டா" சஞ்சீவிபோல் இருக்கிறது.

மூன்று மாதத்திற்கு முன்பிருந்து என் தலைமயிர் கொட்டிக்கொண்டிருந்தது. வெகு விரைவில் தலையில் வழுக்கை ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் எனக்கு உண்டாய்விட்டது.

ஆனால் 'ரீட்டா'வை உபயோகித்த ஒரு மாதத்திற்குள்ளாகவே தலைமயிர் கொட்டுவது முற்றிலும் நின்று எனது பயமும் நீங்கிவிட்டது.

இப்பொழுது என் தலைமயிர் முன்னைவிடக் கறுகறு வென்றும், உறுதியாகவும், அடர்த்தியாகவும் வளர்ந்திருப்பதோடு மூளைக்கும் நல்ல குளிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் "ரீட்டா" ஒரு நல்ல 'கூந்தல்' சஞ்சீவி என்பதில் சந்தேகமில்லை. தலைமயிர் கொட்டினாலும், தலையில் சொறி—சுண்டு முதலியவை உண்டானாலும், தலைமயிர் நரைத்துவிட்டாலும் நண்பர்கள் யாவரும் ரீட்டாவை உபயோகப்படுத்துவது அவசியத்திலும் அவசியம். ரீட்டா நல்ல பலனைத் தரும் என்பது எனது அனுபவ பூர்வமான சிபார்சாகும். ஒரு அவுன்ஸ் பாட்டிலின் விலை ரூ. 0—12—0

"தேனீ"

கூடிய சீக்கிரம் வெளிவரத் தயார்!

மகோன்னத தமிழ் படம்

"மாயா ஜோதி"

★ ★

T. R. மகாலிங்கம்
காளி N. ரத்தினம்
T. S. துரைராஜ்
P. G. வேங்கடேசன்

K. K. பெருமாள்
T. S. ராஜலக்ஷ்மி
ராஜகாந்தம்
முதலியோர் நடித்தது.

ஸ்டுடியோ :
மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.

டைரக்ஷன் :
R. பத்மநாபன்.

பூரண விநியோக உரிமையாளர் :—
ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸ்,
மதராஸ் :: :: :: மதுரை

4 கடியாரங்களும், 990 அழகிய சாமான்களும் விலை ரூ. 1—8—0 தான்



நாங்கள் தயாரித்துள்ள ஆட்டோ மோதியா 4-பாட்டில்களாவது, அல்லது 4-டப்பி படை மருந்தாவது ஒரே தடவை ரூ. 1—8—0க்கு வாங்குபவர்களுக்கு இனாமாக உறுதியானதும் 10 வருஷம் உத்திரவாதமும் உள்ள ஒரு டம்மி பாக்கட் வாட்சும், அல்லது ஒரு டார்ச் லைட், 1 பாக்கட பிரஸ், 1 சேப்டி ரேசர், 1 பவுண்டன் பேனா, 1 கண்ணாடி, 1 சீப்பு, 1 சோப், 1 மோதிரம், 12 பொத்தான்கள், 972 சாமான்களும், 1 மணிபர்ஸ், 1 ஜோடி பிரிசார்வார் (கால் அளவு அனுப்பவும்) 1 ஜதை பூட்ஸ லேசுடனும், 3 டம்மி கைக்கடியாரங்களும், 1 ஜோடி விளையாட்டு கார்டுகளும் முதலியன அனுப்பப்படும். பாக்கிங் & போஸ்டேஜ் சார்ஜ் அணா 12. குறிப்பு:—சிலோன் வாசிகள் ஆர்டருடன் ரூ. 2—6—0 முன்பணமாக அனுப்பவேண்டும்.

Indian Watch Stores, Post Box No. 12204, Calcutta.

ரூ. 500 இனாம்.

சித்த வசீகர யந்திரம்:—அதிக சக்தியும், மஹிமையும் வாய்ந்தது. இதை வைத்துக்கொள்வதால் அடைய முடியாதவைகளையெல்லாம் அடைந்து விடலாம். இதற்குச் சக்தியைக் கொடுக்க வேறு எவ்விதக் கஷ்டமும் படவேண்டியதில்லை. இந்த யந்திரத்தின் அற்புத சக்தி, நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்களை உங்கள் கைக்குக் கிட்டச்செய்யும். அவர்கள் பிறகு உங்களை விட்டு பிரியமாட்டார்கள். இது கிரஹக் கோளாறுகளை மாற்றி எதிரிகளைப் பணியச் செய்து, பரீட்சையிலும், வியாபாரத்திலும், லாட்டரியிலும், பந்தயங்களிலும், உத்தியோகத்திலும், ஐச்வர்யம் பெறுவதிலும் வெற்றி அளிக்கவல்லது. சிசுக்களை வியாதிகளினின்று காப்பாற்ற தாய்கள் இதை அணிந்து கொள்ளலாம். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்க ஆரம்பித்தாலும் இதனுடைய சக்தி என்றும் மாறாதிருக்கும். குரு மஹாராஜ் தம்முடைய வாழ்க்கையில் அனுபவ முறையில் கண்டுபிடித்த யந்திரம். விலை ரூ. 1/2. போஸ்டேஜ் மாத்திரம் பிரத்தியேகம். 3 யந்திரங்கள் விலை ரூ. 3/-. தபால் சார்ஜ் இனாம். ஸ்பெஷல் சக்திவாய்ந்த யந்திரம் விலை ரூ. 4/-. தபால் சார்ஜ் அணா 7.

மிஸ்டர் D. R. D. சான்ஸர் பரோடாவிலிருந்து எழுதுகிறார்:—இந்த யந்திரத்தை வைத்துக்கொண்ட மாத்திரத்தில் எல்லா காரியத்திலும் வெற்றியடைந்து விட்டேன். நான் பழைய கவசத்தை கெட்டுப் போக்கிவிட்டதால் உடனே ஸ்பெஷல் யந்திரம் அனுப்பவும். இதை பொய்யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனாமாக அளிக்கப்படும்.

Shri Guru Maharaj Bhardwaj Jyotish Ashram (648X)
KALOWANI STREET, :: JULLUNDUR CITY

★ நக்ஷத்திர உலகிலே ...

''தேனி''

● 'அவியல்' என்றவுடன் ஹோட்டலில் செய்யப்படும் வாய்க்கு ருசியான ஒருவகைக் குழம்பு என்று எண்ணிவிட வேண்டாம். இது மனதுக்கு ருசி தரும் தமிழ்ப் படமான பிலிம் குழம்பாகும். படத்தின் பேர் அவியல் ஆனுல்கூட படம் சுத்த அவியல் என்று சொல்ல முடியாது.

மதராஸ் கணேஷ் பிலிம்ஸ் தயாரிக்கும் இந்த அவியலில் எம். எஸ். முருகேசன், டி. வி. சேதுராமன், லூஸ் ஆறுமுகம், வி.எஸ். கௌஸல்யா, டி. எஸ். ஜயா, டி. வி. ஏ. பூரணி முதலியவர்கள் பதார்த்தங்களாக நடிப்பார்கள். இந்த அவியலைத் தயார் செய்யும்பொறுப்பு டைரெக்டர் கே. வி. எஸ். வாஸ் என்பவருக்கு என்று கேள்விப்படுகிறேன்.

● இம்மாதம் 8-ந் தேதியன்று மயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலில் 'ஸைதாப்பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்ட்ரேட்' என்ற நாடகத்தை மயிலை கலைவாணி கலைக் கழகத்தார் திறமையுடன் நடித்துக் காட்டினர்கள்.

இவ்வளவு நீளமான பெயர் கொண்ட கதையை எழுதியவர் வி. வி. கோபாலரத்தினம் என்பவர்.

இந் நாடகத்தில் டி. ஆர். பி. எஸ். மணி, வி. வி. ரங்கப்பா, வி. ஸ்ரீனிவாசன், கே. கே. ராஜகோபாலன், பி. எஸ். மணி முதலியவர்கள் முக்கிய பாத்திரங்களாக நடித்தனர்.

ஸ்ரீமான் எஸ். நடராஜனின் 'கணபதி வணக்கம்' 'சிவபூஜை' 'பாம்பாட்டி' முதலிய நடனங்கள் நாடகத்தின் இடையே ரஸிக்கக்கூடியனவாக இருந்தன.

இக் கழகத்தார் குற்றங்குறைகள் சிறிதுகூட இல்லாத நல்ல நாடகங்களை மேலும் மேலும் நடத்த முயல்வார்களாக!

● 'பரஞ்சோதி' என்பது என்ன பாஷைப் படம் என்ற விபரம் தெரியவில்லை. இதை பிரேம்சேதனு தயாரிக்கப் போகிருராம். பாரத் மூவிடோனில் இப்படம் எடுக்கப் படும் என்று தெரிகிறது.

● மாஜி பிரதம மந்திரி ராஜாஜி எழுதிய 'பார்வதி' என்ற கதை சினிமாப் பட ரூபமாக மாறப்போகிறதாம். இதை வடநாட்டுக் கம்பெனியான 'நவயுகசித்ரபத்' கம்பெனியார் பிடிக்கப் போகிருர்கள். டைரெக்ட் செய்வது ஜுன்னர்கார் என்பவராம்.

● டைரெக்டர் பத்மனுபன் ஒரு புதிய கம்பெனியை ஆரம்பித்துள்ளார். இக் கம்பெனியின் மூலம் முதலில் தயாரிக்கப்பட விருப்பது 'தேவகன்யா' என்ற புராணப் படமாம். நடிகர் தேர்தல் விரைவில் நடக்குமென்று கேள்வி.

● 'சதிசுகன்யா' என்றபடம் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் வெகு மும்முரமாக எடுக்கப்பட்டு வருகிறது. டி. ஆர். ராஜகுமாரி நடிக்கும், மீனுட்சி கம்பெனியின் இப்படத்தை டி. ஆர். சுந்தரமும், டி. வி. சாரியும் டைரெக்ட் செய்து வருகின்றனர்.

விமர்சனம்

"லகன்"

ஹரிஷ் என்பவர் ஒரு சங்கீதப் பாடசாலையில் உபாத்தியாயர். அதே பாடசாலையில் குஸம் என்ற பெண் படித்து வருகிறாள். ஹரிஷ் அவளை ஒரு நல்ல பாடகியாக்கி வைக்கிறார். இருவருக்குள்ளும் நல்ல நட்பு எற்படுகிறது.

சில காலத்திற்குப் பின் குஸம் ஒரு பத்திராசிரியரை மணம் செய்து கொள்ள முயல்கிறாள். ஹரிஷ் இதையறிந்து அவளிடம் ஓடி, தான் இது வரை அவளைக் காதலித்து வருவதாகவும், ஆகவே தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்.

ஆனால் குஸம் தான் ஹரிஷை குருவாகவே பாவித்து வந்தாளென்றும், உண்மையில் தான் அவரைக் காதலிக்கவில்லை யென்றும் கூறி பத்திராசிரியரையே மணந்து கொள்கிறாள். ஹரிஷ் மனமுடைந்து ஊரைவிட்டு ஓடிவிடுகிறார்.

சில காலம் சென்றபின் ஹரிஷ் மீண்டும் குஸமின் வீட்டில் தங்கியிருக்கிறார். அப்பொழுதும் அவர் குஸமிடம் தன் காதலை வற்புறுத்திக் கொண்டே யிருந்தார்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் குஸமின் கணவன் அவர்களிருவர் மீதும் சந்தேகம் கொள்கிறார். குஸமின் வாழ்க்கை இருள் சூழ்கிறது.

ஒருநாள் ஹரிஷ் ஒரு காரில் அறைபட்டு உயிர் விடுந்தருணத்தில் குஸமின் கணவனை அழைத்து குஸம் நிரபாராதி என்று கூறி உயிர் விடுகிறார். அதன்பின் குஸம் தன் கணவனுடன் இன்பமாய் வாழ்ந்து வருகிறாள்.

இது நியூதியேட்டர்சார் இப்பொழுது தாயாரித்திருக்கும் 'லகன்' என்ற ஹிந்தி படத்தின் கதையின் சாராம்ஸம்.

கதை சாதாரணமாக இருந்தாலும் படம் கவர்ச்சி தரும் முறையிலேயே எடுக்கப்பட்டிருக்கிறது.

சைகால், கணன்பாலா, நவாப், நிமோ, முதலியவர்கள் முக்கிய பாத்திரங்கள். எனவே நடிப்புக்கும், இனிய ப்பாட்டுக்கும் படத்தில் பஞ்சமில்லை.

படப்பிடிப்பு அவ்வளவு ஸ்பஷ்டமாக இல்லை. ஒலிப்பதிவு நன்றாகவேயிருக்கிறது. நியூதியேட்டர்சார் இதுவரை எடுத்த படங்களில் இது சிறிது சோடையாக இருக்கிறதென்றாலும், நம் தென்னாட்டுப் படங்களுக்கு இது எவ்வளவோ தேவலை என்று கூறலாம். 13 ஆயிரத்துச் சில்லரை அடி நீளம் உள்ள இப்படம் ஒரு நல்ல பொழுதுபோக்கு சாதனம் என்று கூறலாம். ஸ்டார் டாக்கீஸுக்கு விரைவில் விஜயம் செய்யுமிதை யாவரும் கண்டு களியுங்கள்!

சுபத்திரா

(கன்னடம்)

இம்மாதம் 12-ந் தேதி வெலிங்டன் டாக்கீஸில் "சுபத்ரா" என்ற கன்னடப் பேசும் படத்தின் வியாபாரக் காட்சி நடைபெற்றது. இப் படத்தை பெங்களூர் பாலாஜி குப்பி பிலிம்ஸார் தயாரித் திருக்கின்றனர்.

கதை நாம் திரும்பத் திரும்ப அனுபவித்த புராண அவியல்தான். எனினும் அதைக் கையாண்டிருக்கும் முறை கவர்ச்சிதரும் முறையில் இருக்கிறது. படத்தின் வெற்றிக்கு சம்பாஷணை ஒரு முக்கிய அம்சம் என்பதை அறிந்து நல்ல ஹாஸ்ய முறையில் சம்பாஷணை அமைக்கப் பட்டிருப்பது பாராட்டத் தக்கது. ஆரம்பமுதல் கடைசிவரை நம்மை உட்கார்ந்து ரஸிக்கச் செய்தது சம்பாஷணைதான்.

ஹொன்னப்ப பாகவதர் அர்ச்சுனனுக நடித்து நன்ருகப் பாடியிருக்கிருர். ஜயம்மாள் சுபத்திரை வேடம் தாங்கி தன் முகபாவத்தாலேயே தன் திறமையை வெளிப்படுத்தியிருக்கிருர்.

பழம்புலியான குப்பிவீரண்ணு இப் படத்தின் தலைமுதல் வால்வரை நடித்திருக்கிருர். சமயத்திற் கேற்ற அங்க அசைவுகள், முகத்தோற்றங்களை மிகப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்துகிருர் வீரண்ணு. மாட்டுக்காரப் பையன்களுக்கு முன் கூத்தாடிவிட்டு இதுதான் பரதநாட்டியம் என்று சொல்கையில் ஒருவராலும் சிரிக்காமல் இருக்கமுடியாது. இதர நடிகர்களும் தக்கவாறு தம் பொறுப்பை நிறைவேற்றி யிருக்கின்றனர்.

இப்படத்தில் ஒரு நாரதர் வருகிருர். புராணப் பட மென்ருல் ஒரு நாரதர் அவசியம் ஆஜராகவேண்டும் என்ற எண்ணத்துடன் நாரதரைப் படத்தில் புகுத்தியிருப்பதாகத் தெரிகிறதே யொழிய அவருக்கும், கதைக்கும் சம்பந்தமே கிடையாது. நாரதர் மேக மண்டலத்தில் செல்கையில் ஒவ்வொரு படியாக ஜாக்ரதையாகக் கால்வைத்து நடப்பதை ஸ்பஷ்டமாகக் காட்டாதிருக்கலாம்.

படத்தெளிவு மிகச் சுத்தமாக இருக்கிறது. ஒலிப்பதிவு சில இடங்களில் வரம்பு மீறிப் பதிவுசெய்யப்பட்டு ஒரே இரைச்சலாக இருக்கிறது. சில இடங்களில் காட்சிமறைவு வெகு நிதானமாக இருக்கிறது. கேமிராமென் இதைக் கவனித்திருக்கலாம்.

செட்டிங்ஸ், ஆடை முதலியவைகள் கவர்ச்சி தரும் தோரணையில் இருக்கின்றன. பாடல்கள் இனிமையாகவே இருக்கின்றன. எனினும் சந்தர்ப்பமில்லாமல் சில இடங்களில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

இன்னும் சில குற்றங் குறைகள் இருந்தாலும், பொதுவாக படம் மிக நன்ருயிருக்கிற தென்றே சொல்லலாம். இப்படத்திற்கு சினிமா ரஸிகர்களின் ஆதரவு நிறையக் கிடைக்குமென்றே நம்பலாம்.

வீண் வம்பு

"சல்லடை"

ஸ்ரீ வி. சக்கரை செட்டியார்........ நகர சபையின் சாதாரண கூட்டத்தில், சென்னை நகரின் மேயராக ஏகமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

—செய்தி.

மேயராக வந்திருப்பவர் சக்கரை செட்டியார் ஆகையால் இனிமேல் கார்பொரேஷனில் அவர் செய்யும் காரியங்களெல்லாம் இனிப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கலாமா?

* * *

போலீஸ் மீது ஜனக்கூட்டத்தினர் செங்கற்கட்டிகளை வீசியதாகக் கூறப்படுகிறது. நாலு இடங்களில் போலீஸார் கண்ணீர்ப் புகையை உபயோகித்தனர்.

—செய்தி

செங்கற்கட்டியால் தாக்கப்பட்ட போலீஸார் கண்ணீர்ப்புகை விட்டதில் ஆச்சரியமில்லை.

* * *

ஹிந்து மஹா சபையின் தலைவர் பதவிக்குப் பெரும்பாலான மாகாணங்கள் வி. டி. சவர்க்காரின் பெயரையே சிபார்சு செய்திருக்கின்றன.

—செய்தி.

ரொம்ப சரி; காங்கிரஸை சதா தூஷித்துக் கொண்டிருக்கும் கொள்கையுடைய ஒரு ஸ்தாபனத்திற்கு இந்தியாவில் நமது வி. டி. சவர்க்காரைத் தவிர யோக்யதையுடையவர்கள் வேறுயார் இருக்கப் போகின்றனர்!

* * *

தமிழிசை மகாநாட்டிற்கு வந்து தமிழ்ப் பாடல்கள் பரவ வேண்டுமென்று பேசிவிட்டுப்போன அரியக்குடி இன்று மன்னார்குடியில் அடித்திருக்கும் பல்டியைக் காணவேடிக்கையாக இருக்கிறது.

—ஒரு வித்வான்

பல்டி அடிப்பது வேடிக்கையாகத் தானிருக்கும். ஆனால், அரியக்குடி மன்னார்குடியில் அடித்த பல்டி காரிய ஹோதாவிலேயே இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

* * *

ஜப்பானின் அடுத்த வேலை—பர்மா ரோட்டை வெட்டுவதே.

—செய்தித் தலைப்பு

பாவம் எதிரிகளை வெட்டுவதற்கு பதில் இனி ஜப்பான் ரோட்டை வெட்டிப் பிழைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. எனினும் பிரிட்டன் இதற்கு நல்ல கூலி கொடுக்காமல் போகாது.

* * *

சாகும்வரை உண்ணாவிரதமிருக்க மாணவன் முடிவு.

—செய்தித்தலைப்பு.

சாகும்வரை உண்ணாவிரதமிருந்தால், மாணவன் முடிவு என்னாகும்? சந்தேகமில்லாமல் சாகவேண்டியது தான்.

உடைந்த படகு

"நாதன்"

மோட்டார் போகையில்

டாக்டர் ராஜகோபாலன் வீட்டுக்கு முன்னால் ஒரு வாடகை மோட்டார் நின்று கொண்டிருந்தது. ராஜூவின் நண்பன் நாணு மோட்டாரின் திறந்த கதவைப் பிடித்தவாறே "டேய் ராஜு? என்னடா ரொம்ப லேட் பண்ணறே! உள்ளே என்ன, ராகு காலம் குளிகை காலம் பார்த்துண்டா இருக்கே?" என்று கத்தினன்,

அடுத்த நிமிடம் ராஜு உள்ளேயிருந்து வந்துகொண்டே "ஏண்டா நாணு! ராகுகாலம் பார்த்தால்தான் என்ன கெட்டுவிடப் போகிறது! மேலும் நாம் போவதும் பெண் பார்க்கும் காரியமல்லவா!" என்று சிரித்தவாறு கூறினன்.

"சரிதாண்டா, கர்நாடகம்! வந்து மோட்டாரிலே உட்கார்—ஏது உடுப்பைப் பார்த்தால் புது மாப்பிள்ளை போல் தோணறதே!" என்று கிண்டலாக நாணு கேட்டான். "இரக்கப் போனலும் சிறக்கப் போன்னு பெரியவா சொல்லியிருக்காளோல்லியோடா? அதுதான்........." என்று ராஜு சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

"ஆமாண்டா ஆமாம்; அதிலும் நீ லலிதாவிடம் காதல் பிச்சை இரக்கப் போவதால், உன் உடுப்பு சிறக்க இருக்க வேண்டியதுதான்" என்றவாறே நாணுவும் அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்! மோட்டார் புறப்பட்டது.

"டேய் நாணு! அந்த லலிதா உங்கள் வீட்டில்தான் இருக்கிறளாடா? இப்பப் போனல் அவளை அவசியம் பார்க்க முடியுமல்லவா!" என சம்பாஷணையைத் தொடர்ந்தான் ராஜு.

"அதென்னமோடாப்பா, நான் வரச்சே அவள் எங்க வீட்டிலேதான் இருந்தாள், நாம் போகும் பொழுதும் அவள் இருந்தால், அது உன் அதிர்ஷ்டம்தான்......"

"அதுசரி; நான் இன்று உங்கள் வீட்டுக்கு வரும் சங்கதி அவளுக்குத் தெரியுமாடா நாணு?"

"சரியாப் போச்சு போ! உன் பெயரைச் சொன்னலே அவள் கோபித்துக் கொள்கிறளே! அப்படிப்பட்டவளிடம் நீ வருவதைச் சொல்லி வைத்தால், அவள் இருப்பாளா, என்ன?"

"என்ன அப்படிச் சொல்றே! என் பெயர் அவளுக்கு அவ்வளவு கோபத்தையா கொடுக்கிறது? ம்......"

"என்னடா 'ம்' இங்கறே! நான் பொய்யா சொல்றேன்?"

"சரி, உண்மையாகவே இருக்கட்டும்டா! ஆனலும் அவளைச் சரி செய்வது மட்டும் உன் பொறுப்பு என்பதை மறந்து விடாதே!......"

"ரொம்ப சரி, எனக்கு நல்ல உத்தி யோகம் கொடுத்தாய்! கலியாணம் செய்துகொள்ளப் போவது உங்கள் இரண்டு பேரின் கடமை—அவளைச் சரிப்படுத்தும் முதல் காரியம் மட்டும் என் கடமையோ!—ம், இப்படியும் பேசுவாய் இதற்கு மேலும் பேசுவாய்; ஏனென்றால் 400 ரூபாய் சம்பளத் தில் ஸ்டுடியோ மானேஜர் வேலை யல்லவா, பார்க்கிறாய்!"

"அடேயப்பா, எவ்வளவு பெரிய கோபம்டா உனக்கு! இன் னிக்கு நீ எனக்கு உதவினால், நாளைக்கு நான் உனக்கு உதவமாட் டேனா?..."

"சரிதாண்டா, சித்தெ வாயை மூடிண்டுவா! எங்க வீடு பக்கத்திலே ஆச்சு......"

இரண்டொரு நிமிஷம் இருவரும் மௌனமாயிருந்தனர். சிறிது நேரத் தில் மோட்டார் நாணுவின் வீட்டுக்கு முன் நின்றது.

வந்த காரியம்?

நாணுவும், ராஜுவும் வீட்டுக் குள் நுழைந்தனர். கூடத்தில் நாணு வின் தாய் லோகம்மாளும், அவன் தங்கையும் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். இவர்கள் உள்ளே நுழைந்ததைக் கண்டதும் நாணுவின் தங்கை, நாணத்துடன் வாரிச் சுருட் டிக் கட்டிக்கொண்டு ஒரு அறைக்குள் ஓடிவிட்டாள்.

"டேய் ராஜு! இந்த ஊஞ்சலில் உட்காருடா" என்று ராஜுவை நோக்கிச் சொல்லிவிட்டு "அம்மா! நான் சொல்ல வில்லையா! அந்த ராஜகோபாலன்தான் இவன். என் னோடு மெடிகல் காலேஜில் படித் தவன்" என்று நாராயணன் லோகம் மாளிடம் கூறினான்.

"வாடாப்பா, ராஜகோபாலா! எல் லோரும் சௌக்கியமா?" என்று லோகம்மாள் கேட்டாள்.

"எல்லோரும் உங்க ஆசீர்வாதத் தினால் சௌக்கியந்தான் மாமி! அது சரி, முன்பு நான் அடிக்கடி உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேனே, அதற் குள் என்னை மறந்து விட்டீர்களா, என்ன?" என்று ராஜு கேட்டான்.

"ஆமாண்டா, கொஞ்சம் மறந்து தான் போயிட்டேன். உன்னைப் பார்த் தும் ரொம்ப நாளாச்சோல்லியோ!..." என்று லோகம்மாள் முடிக்குமுன் "அம்மா, ராஜுவை நாம் என்னிக் குமே மறக்காதபடி ஒரு ஏற்பாடு செய்துட்டாப் போறது" என்று குறுக்கிட்டான் நாணு.

"அதென்னடா அது, ஏற்பாடு? உங்க ஆத்திலே என் உருவச்சிலையை நடப் போகிறாயாக்கும்" என்று சிரிப் புடன் ராஜு கூறினான்.

ராஜுவின் பேச்சு எல்லோரையும் சிரிக்க வைத்தது. அந்தச் சிரிப் பொலியில் ஒரு இனிமையான குரல் பிரத்தியேகமாய் ராஜுவின் செவியில் விழுந்தது. ராஜு ஒரு விநாடி மெய்ம்மறந்து விட்டான். "ஆம், அவளுடைய சிரிப்பொலிதான். நான் உள்ளே வரும்பொழுது, ஓடி ஒளிந் தது ஒரு வேளை, லலிதா தானோ?" என மனதுள் சொல்லிக் கொண் டான் ராஜு.

"என்னடா ராஜு யோசிக்கறே! ரொம்பக் களைப்பா யிருக்கிறதாக் கும்......" என்றான் நாணு.

"அம்மா லக்ஷ்மி! உங்க அண்ணுவுக்கும், அவருக்கும் காப்பி கொண்டு வந்து வை!" என்று லோகம்மாள் சொன்னுள்.

இரண்டொரு நிமிடத்தில் அவர்கள் இருந்த ஊஞ்சலின்மீது காப்பியும், டிபனும் பிரசன்னமாயின. காப்பி கொண்டுவந்து வைத்துச் சென்ற லக்ஷிமியை, ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான் ராஜு. "அப்பா, ராஜு! இவள் தான் என் பொண்ணு; ராஜலக்ஷிமி இன்னு பேரு, எட்டாவதுவரை படித்திருக்காள். சங்கீதத்தைக் கரைத்துக் குடித்திருக்கிருள்..." என்று அடுக்கிக் கொண்டு போனுள் லோகம்மாள்.

"ஏனம்மா, ராஜுவுக்கு அவ்வளவு சொல்லணுமா? நம்ம ராஜலக்ஷிமியைப்பற்றி அவனுக்குத் தெரியாதா? அவளைக் கலியாணம் செய்து கொள்ளணும்னு நீ சொன்னு மறுக்கவா போருன்!" என்று நாணு இடைமறித்துக் கூறினுன்.

ராஜு நாணுவை ஒரு தினுசாக முறைத்துப் பார்த்தான். நாணு புன்சிரிப்புடன் "ஏண்டா, காப்பி சூடா யிருக்கா? கொண்டா குளிரப் பண்ணித் தரேன்" என்ருன் கண்ணைச் சிமிட்டியவாறு.

இதற்குள் லோகம்மாள் "அடி லக்ஷிமி! அவர் என்னமோ உன் பாட்டைக் கேக்கணும்னு சொல்ருர். ஹார்மோனியத்தை எடுத்து வைத்து ஒரு பாரதி பாட்டைப் பாடு பார்ப்போம்" என்று கூறினுள்.

"இல்லே, வேண்டாம் மாமி! எனக்கு சங்கீதம்னு கட்டோடு பிடிக்காது..." என்ருன் வெறுப்புடன் ராஜு. இதற்குள் உள்ளேயிருந்து 'ஆசை முகம் மறந்து போச்சே' என்ற பாட்டு பக்கவாத்தியத்துடன் கிளம்பியது.

சிறிது நேரம் பல்லைக் கடித்துக் கொண்டு ராஜு சகித்திருந்தான். "மாமி! 'டைம்' ஆயிடுத்து, போயிட்டு சாவகாசமா வரேன்" என்று கூறியவாறு எழுந்திருந்தான்.

"இருடா, வந்த காரியம் முடியாமெ, என்னடா அவசரம்?" என்று நாணு அவன் கையைப் பிடித்து உட்காரவைத்தான்.

நல்ல வரன்

"**ம்**, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது..." என முணுமுணுத்தவாறே ஊஞ்சலில் உட்கார்ந்தான் ராஜு. "நல்ல வேளே, கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது'ன்னு சொல்லாதெ போயிட்டயே!- டேய் ராஜு ஒரு 'டென் மினிட்ஸ் வெய்ட்' பண்ணு! இதோ ஜல்தி வந்துடறேன்." என்று சொன்னவாறே சமையல் கட்டுக்குள் சென்ருன் நாணு.

"சரிதாண்டா, போய் வா, உலக்கையில் தலேயை இட்டுக் கொண்டு உரலுக்கு—ச்சு! இல்லே யில்லே; உரலில் தலேயை மாட்டிக் கொண்டு உலக்கைக்கு பயந்தால் ஆகுமா? ம்-காத்திருக்கேன், போயிட்டு வா!" என்று பெருமூச்சுடன் சொல்லிவிட்டு மேலே எங்கேயோ பார்க்க ஆரம்பித்தான் ராஜு.

அப்போது லோகம்மாள் ராஜுவை நோக்கி "அப்பா ராஜு இன்னிக்கி நம் ஆத்திலேதான் நீ சாப்பிடணும்..." என ஆரம்பித்தாள்.

"அதற்கென்ன மாமி! நான் சாப்பிடுகிறதே உங்கள் சாப்பாடுதான். இன்னிக்கு அவகாசமில்லே; ஒரு

இடத்துக்கு அவசரமாய்ப் போகணும்...'' என்ருன் ராஜு.

"அப்படிச் சொல்லாதே ராஜு! கண்டிப்பாய்ச் சாப்பிட்டு விட்டுத்தான் போகணும். அது சரி, ஒரு வார்த்தை—நீ ஆகட்டும்னு சொல்றதாயிருந்தா நான் சொல்றேன்...'' என்ருள் லோகம்மாள்.

"மொதல்லே விஷயத்தைச் சொல்லுங்கோ மாமி! அப்புறம் முடியுமானு அவசியம் ஆகட்டும்னு சொல்றேன்...''

"ஒன்னுமில்லையடாப்பா! உன்னைப் பத்தி எங்க நாணு எல்லா விபரத்தையும் சொல்லி யிருக்கான். எனக்கும் உன்னைப் பார்த்தவுடனே எங்க லக்ஷ்மிக்கு ஒரு நல்ல வரன் கிடைச்சுட்டுதன்னு ரொம்ப சந்தோஷமாப் போச்சு...நீ சம்மதிச்சா நாளைக்கே நிச்சயதார்த்தம் நடத்தி விடலாம்...''

ராஜு திடுக்கிட்டுப் போனன். "இதேதடா வம்பாயிருக்கு! உடம்பு வேண்டாம் கையைவிட்டால் போதும்னு சொல்றமாதிரியல்லவா ஆயிட்டது! வரட்டும் அந்த நாணு, நன்ன புத்தி கற்பிக்கறேன்'' என முணு முணுத்தான்.

"என்டாப்பா, என்ன யோசனை? பொண் அழகாயில்லையேன்னு நினைக்கறயாக்கும்...'' என லோகம்மாள் வார்த்தையைத் தொடர்ந்தாள்.

"சேச்சே! அப்படி நினைப்பேனு என்ன! உங்க லக்ஷ்மி சாட்சாத் லக்ஷ்மிபோலல்லவா இருக்காள்! நான் யோசிப்பது எங்க அம்மாவை உத்தேசித்துத் தான்......''

"இதுதானு பிரமாதம்! நாளைக்கு நானே உங்க வீட்டுக்கு வந்து உங்கம்மாவின் சம்மதத்தையும் பெறுகிறேன்...''

இப்பொழுது நாணு உள்ளே விருந்து வந்தான். "என்டா நான் புறப்படட்டுமா?'' என்று ராஜு கேட்க "ஓ. கே!'' என்ருன் நாணு.

"மாமி! நான் இன்னும் ஒரு வாரத்தில் வருகிறேன்'' என்று லோகம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்து காரில் ஏறி உட்கார்ந்தான் ராஜு.

"என்னடா, நாணு நீ பெரிய பட்டணம் கில்லாடியா யிருக்கிருயே!'' என்று ராஜு கோபமுடன் கேட்டான்.

"டேய் எல்லாம் உன்னுலே தான் கெட்டது. இதோ இந்த லெட்டரை வீட்டில் போய்ப் படித்துப்பார்! நான் நாளை வருகிறேன்'' என்று நாணு ஒரு காகிதத்தைக் கொடுத்தான் ராஜுவிடம். காரும் நகர்ந்தது.

கடிதமும் கலக்கமும்

"என்மீது தீராக்காதல் கொண்ட டாக்டர் ராஜகோபாலனுக்கு லலிதா எழுதிக்கொள்வது...''

ஐயா,

நீங்கள் என்மீது கரைகடந்த பிரேமை கொண்டிருப்பதற்கு நன்றி. ஆனல் நான் தங்கள்மீது சிறிதும் காதல் கொள்ளவில்லை யென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்டதும், கேட்டதும், பார்த்ததும், தொட்டதும் ஆண்களுக்கு திடீர்க் காதல் உண்டாய் விடுகிறது. இம்மாதிரி காதலை நான் விரும்பவில்லை. பெற்றேருக்கும், சமூகத்துக்கும் கட்டுப்பட்ட நியாயமான கலியாணத்தைச் செய்து கொள்ளவே

எனது அவா. எனவே இன்று முதல் என்னை மறந்து விடுங்கள்! அதுதான் உமது ஆண்மைக்கழகு.

உம்மை வெறுக்கும்,
லலிதா''

இந்தக் கடிதம் மிஸ்டர் ராஜுவின் கையில் விரிந்தபடி இருந்தது. அவனுடைய வாய் வெகு வேகமாக கடிதத்திலிருந்த விஷயங்களைப் படித்தது. கண்களோ ஏமாற்றத்துடனும், கோபத்துடனும் கடிதத்தை உற்று நோக்கின. ஏதோ ஒரு முக்கியமான வஸ்துவை இழந்து விட்டவன் போல் அவன் முகக்களை தென்பட்டது.

"ம்-மறந்து விடுவதா? லலிதா! என் காதலின் வலிமையை நீ அறிந்திருந்தால் இப்படி யெல்லாம் எழுத மாட்டாய்! என்னமோ பிரமாதமாக, காதலைப் பற்றிப் பிரசங்கம் செய்ய வந்து விட்டாயே! உனக்கு காதல் உலகில் 'அ, ஆ' என்ற எழுத்தாவது தெரியுமா? தெரிந்திருந்தால் இப்படி நீ கடிதம் எழுதுவாயா?......''

"லலிதா! நீ என்னை ஒதுக்கினாலும் நான் அப்படிச் செய்ய மாட்டேன். உன்னை என் இதயம் என்றும் மறவாது. இறக்கும்வரை வேறு எவளையும் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன்...இது......

"அதிருக்கட்டும்—ஆமாம்... இந்தக் கடிதம் லலிதா எழுதினதுதானா, அல்லது...இருக்கவே இருக்காது... லலிதா அப்படி எழுதமாட்டாள்... அப்படியானால் இக்கடிதம் யாரால் எழுதப் பட்டது? ஓ! இருக்கும் இருக்கும்; இதெல்லாம் நாணுவின் சூழ்ச்சிதான். வாட்டும் பயல்...'' என்று ராஜு பித்தனைப் போல் பிதற்றிக் கொண்டான்.

அப்பொழுது அவன் உட்கார்ந்திருந்த சோபாவிற்குப் பின் இவ்வளவு நேரமாய் நின்றிருந்த சீதா மெதுவாக இருமினாள். ராஜு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவன் முகம் வெளுத்தது. பேச நா எழவில்லை. "அடே ராஜு! ஏண்டா இப்படி 'லலிதா லலிதா!' ன்னு உயிரை விடறே? எங்கேயோ தெருவில் போற சிறுக்கிகளை நினைத்து நினைத்து ஏண்டாப்பா இளைத்துப் போகிறாய்?'' என்று சீதா ஆரம்பித்தாள்.

"என்னம்மா. நீ சொல்றதைப் பார்த்தால் வீட்டிலேயிருக்கிற சிறுக்கிகளை நினைத்து நினைத்து இளைத்துப் போகணும் போலிருக்கே!'' என்றான் ராஜு.

"அப்படியில்லையடா மண்டு, அவளோ உனக்குக் கிடைக்கப் போவதில்லை, வீணே ஏன் அவளை நினைக்கணும்னுதான் சொல்றேன். பேசாமல் நாணுவின் தங்கை ராஜலக்ஷிமியைக் கலியாணம் செய்து கொள், எதிர் ஜாமீனும் அதிகமாக......'' என்று சீதா முடிக்குமுன் "சரி, சரி வாயை மூடு! இதிலே உன் சூழ்ச்சிகூடக் கலந்திருக்கிறதா?'' என்று கோபமாகச் சொல்லிக் கொண்டே எழுந்து மேல் மாடிக்குச் சென்று விட்டான் ராஜு.

ஸரஸாவைக் கண்டான்

"ஹலோ! யார் பேசறது?''

"..............''

"ஓஹோ! டைரெக்டர் ஸாரா! வந்து...அங்கே நம்ம ஸ்டுடியோ மானேஜர் ராஜு இருக்காரா?'.

"..................................''

"சரி, தயவு செய்து அவரை சீக்கிரம் நம்ம பங்களாவுக்கு வரச் சொல்கிறீர்களா ஸார்!...எஸ்...தேங்ஸ்!...'' என்று சுந்தரேசன் டெலிபோனில்

தகவலைக் கொடுத்துவிட்டு ஒரு நாற் காலியில் உட்கார்ந்தார்.

சிறிது நேரத்தில் 'டக்டக்' என்ற பூட்ஸ் சப்தம் ஏற்பட்டது. சுந்தரேஸன் திரும்பிப் பார்த்தார். புன்னகையுடன் ராஜு வந்து கொண்டிருந்தான். "வாப்பா, ராஜு உட்கார்!" என்று சுந்தரேஸன் சொன்னவுடன், பணிவாக எதிரில் இருந்த நாற்காலியில் ராஜு உட்கார்ந்தான்.

"என்னை வரச்சொல்லி 'டெலிபோனி'ல் கூப்பிட்டீர்களாமே!" "ஆமாம் ராஜு ஒரு முக்கிய விஷயம் சொல்லத்தான் கூப்பிட்டேன்—அதாவது நமது அடுத்த படம் எடுப்பதற்கான முயற்சிகள் நடப்பதுதான் உனக்குத் தெரியுமே! அந்தப் படத்திற்காக 'நடிகர்கள் தேவை' என்று விளம்பரப் படுத்தியிருந்தேன். நாளையிலிருந்து அனேகமாக நடிகர்கள் ஸ்டுடியோவுக்கு வருவார்கள்......" என்று சொல்லி சிறிது பெருமூச் செறிந்தவாறு பேசாதிருந்தார்.

பின்பு மீண்டும் தொடர்ந்து "நமது புதிய படத்திற்கு வேண்டிய நடிகர்களை நானே நேரில் கண்டு தேர்ந்தெடுக்கலா மென்றுதான் இருந்தேன். ஆனால் எனக்கு உடம்புக்கு ரொம்ப முடியாமல் இருக்கிறது. அதனால் நடிகர் தேர்தலைத் திறமையாக நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும். படத்தின் வெற்றிக்கு நடிகர்கள்தான் முக்கியம். எனவே நல்ல பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்......என்ன தெரிந்ததா?" என்றார் சிரமத்துடன் சுந்தரேசன்.

"ஆகட்டும் ஸார்! தங்கள் விருப்பம் போல் நடக்கிறேன்" என்றான் ராஜு.

அச்சமயம் அங்கு ஸரஸா ஓடிவந்தாள். ராஜுவைக் கண்டதும் சிறிது பின்வாங்கினாள். ஸரஸா அங்கு வந்ததைப் பார்த்த ராஜுவுக்கு எல்லையில்லாத ஆச்சர்யம் ஏற்பட்டது.

"மாமா! நீங்கள் இங்கு எப்படி வந்தயள்?" என்று ஸரஸா கேட்டாள். ராஜுவின் எண்ணம் எங்கேயோ இருந்ததால் திகைப்புடன் உட்கார்ந்திருந்தான்.

அதே சமயம் ராஜுவுக்குப் பின்புறம் இருந்த ஒரு திரைச் சீலை சிறிது விலகியது. ராஜு, என்று தன் மாமா இரண்டொரு முறை கூப்பிட்டதால் அந்த ராஜு யாரென்றறிய, லலிதா திரையை விலக்கி எட்டிப் பார்த்தாள்.

சாட்சாத் ராஜு தான் என்று தெரிந்ததும் அவள் உள்ளம் ஏனோ துடித்தது. குழப்பத்துடன் பார்த்துக் கொண்டே யிருந்தாள்.

"ஏனம்மா சரஸா, உனக்கு இந்த மாமாவைத் தெரியுமா?" என்று சுந்தரேசன் கேட்டார். ஸரஸா பதில் சொல்லுமுன், லலிதா இருந்த பக்கம் சிறிது பார்த்தாள்.

லலிதா 'தெரியாது' என்று சொல்லும்படி கையால் சைகை செய்யவே ஸரஸா 'இல்லை, எனக்குத் தெரியாது' என்று சொல்லிக் கொண்டே வெளியே ஓடிவிட்டாள். அப்பொழுது ராஜுவுக்குப் பின், களுக்கென்று வளையொலி கேட்க, ஏதோ இன்ப உணர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தான் ராஜு. ஆனால் அங்கு ஒருவரும் இல்லை.

ஒரு நீண்ட பெருமூச்சுடன் சுந்தரேஸனிடம் விடை பெற்றுக் கொண்டு காரில்போய் உட்கார்ந்தான். அவன் வாய் 'லலிதா' என்ற மூன்றெழுத்தை ஸ்மரித்த வண்ணமிருந்தது.

(தொடரும்)

அதிருஷ்ட நொடி

ஏ. எம். ரஷீத்

"**ப**ல்டி அடித்தான்!" என்ற ஸினிமாப் படத்தைப் பார்த்ததிலிருந்து ஹாஷிம் என்ற சிறுவனுக்கு ஒரு பெரிய ஆசை. அப்படத்தில் கதாநாயகன் செய்த வீரதீர அதிபராக்கிரம வேலைகளை யெல்லாம் தானும் செய்து பார்க்கவேண்டு மென்ற அடக்கமுடியாத ஆவல்.

அவன் பாப்பு அப்பொழுதுதான் வெளியே சென்றார். ஹாஷிம் மெதுவாகத் தலை நீட்டிப்பார்த்தான். அவன் அம்மா ஜான்தான் குறுக்கே இருந்தாள்.

நல்லவேளை, அவன் தன் கதாநாயகன் கத்தியை—கள்ளிப் பெட்டியின் சுற்றி அடித்திருக்குமே அதுபோன்ற தகரத்துண்டில் செய்த 'கூரான வாளை'—வெளியே ஓரிடத்தில் ஒளிய வைத்துவிட்டான். அதைத் தேடவேண்டியதில்லை. ஆனால் நடுவிலிருக்கும் அவன் அம்மா ஜான்?...

அம்மா ஜான் வெயில் போய்விட்டபடியால், காயவைத்த வடகத்தை எடுத்துக் கொண்டிருந்தாள். சில நிமிடங்கள் வரையில் அவள் திரும்பியே பார்க்கவில்லை.

ஹாஷிம் நினைத்தான்—அவள் பார்க்காதபடி மெதுவாகச் சத்தம் செய்யாமல் போய்விட்டாலென்ன?

அடிமேலடி வைத்து மெதுவாக வந்தான். அட கஷ்ட காலமே! அப்பொழுதுதானா அம்மா ஜான் திரும்பிப் பார்க்க வேண்டும்?

"ஹாஷிம்! எங்கே போறே?..." என அவள் வினவினாள்.

ஹாஷிம் பதில் சொல்லவில்லை. அவன் பாப்பு, அவன் கணக்குகளைச் சரியாகச் செய்யாதபடியால், அவன் வெளியே விளையாடப் போகக் கூடாது என்று திட்டம் போட்டுச் சென்றிருக்கின்றார்.

"விளையாடத்தானே?......"

சிறுவன் இதற்கும் பதில் சொல்லவில்லை.

"சரி.....போ......ஆனால் சரியாக ஆறரைக்கெல்லாம் வீட்டிற்கு வந்துவிடவேண்டும். இல்லையோ பாப்புவிடம் சொல்லிவிடுவேன்......"

ஹாஷிம் எதிர்பாராத இச் சந்தோஷ செய்தியைக் கேட்டு பலமாகத் தலையாட்டினான். மறுபேச்சுக்கு இடம் வைக்காதபடி அவன் கால்கள் காலப்பில் கிளம்பிவிட்டன.

தன் 'வாளை' எடுத்துக்கொண்டு சிநேகிதன் பஷீர் வீட்டுக்குச் சென்றான்—பஷீரை எதிரியாகப் போட்டுச் சண்டை செய்ய; பஷீர் வீட்டிலில்லை. என்றாலும் ஹாஷிமின் உற்சாகம் குறையவில்லை. அரை பர்லாங்கு தூரத்திலிருந்த 'பொட்டவெளி'யை நோக்கிப் புறப்பட்டான். அங்குதானே ஸினிமாவேலையைக் காட்ட முடியும்! மணலில் குதிக்கலாம்; சிறு செடிகளை எல்லாம் வெட்டி வீழ்த்தலாம்; அங்கு ஓடும் சிற்றோடையைக் கலக்கிச் சேறாக்கலாம்......எல்லாம்!

ஹாஷிம் தன் வாளைத் தொங்க விட்டுக்கொண்டான்—அவன் குழந்தை மனம் அப்படிக் கற்பனை செய்து கொண்டது. அவன் இப்பொழுது

கதாநாயகன். அவன் எதிரிகள் எங்கெங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆ! இதோ வந்துவிட்டார்கள்.........

கத்திக்குக் கத்தி, கேடயத்துக்குக் கேடயம் உராயும் சப்தம். ஒன்று, இரண்டு, மூன்று...எதிரிகள் சாய்ந்தார்கள். ஒவ்வொரு எதிரிக்கும் சரியான ‘ இடி ’!

ஒரு தாழ்ந்த ஆலமரக்கிளையில் அவன் உட்கார்ந்து கொண்டு, அதை ஆட்டிவிட்டான். அவன் குதிரை “மோதி” பறந்து செல்கின்றது. ஆஹா! எதிரிகளில் எவ்வளவு ஆட்கள் தாத்தியும் ஒருவன்கூட அருகிலும் நெருங்க முடியவில்லையே!...... வரவர கிளை மிகவும் வேகமாக ஆட ஆரம்பித்தது.

ஆ! இதோ ஒரு எதிரி அருகில் எப்படியோ வந்துவிட்டான். உடனே ஹாஷிம் தன் கிளைக் குதிரையிலிருந்து வெகு ஸ்டெயிலாகக் கீழே ஸம்மர்ஸால்ட் அடித்தான். அவனுக்கு உண்மையாகவே நல்ல அடி. என்றாலும் ஹாஷிம் பொருட்படுத்தவில்லை. எதிரிகள் சூழ்ந்துகொண்ட பொழுது சிறு விஷயத்தை யெல்லாம் பொருட்படுத்தினால் முடியுமா ?

உடனே சண்டைதான். ஸினிமாவில் நடப்பதுபோல பழைய கதைதான். எதிரிகள் மாண்டார்கள். கதாநாயகனும் பிடிபட்டாக வேண்டுமென்ற விதி உண்டு. ஆனால் அது கடைசியிலல்லவா?—கதாநாயகி காதலாகி விட்டபொழுது!

மறுபடியும் குதிரை சவாரி! ஆலமாத்துக் கிளை உலுக்கப் படுவது போல ஆட்டப்பட்டது. நம் கதாநாயகனுக்கும், ஸினிமாக் கதாநாயகனைப் போல, குதிரையில் நின்றவாறும் சவாரி செய்யத் தெரியும் என்று ஜனங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாக இருந்தது.

ஒரு விழுதைப் பிடித்துக்கொண்டு ஹாஷிம் கிளையின் மேல் நின்று கொண்டான். அவன் பயப்படாமல் நிற்க, அவன் குதிரை நினைக்கமுடியாத காலப்பில் சென்றுகொண்டிருந்தது.

“ கட்...ட்ட்...ட்ட்...ர்ர்....ஷ்வ்ஷ்.........”

நம் சிறு கதாநாயகன் எதிர்பாரா விதமாக அந்தக் கிளை முறிந்து விழுந்தது. சில சமயங்களில் ஒன்றிரண்டு வண்டிகள் மாத்திரம் செல்லும் அந்தப் பாதை நன்றாக அடைக்கப்பட்டது. இப்பக்கம் சிற்றோடை; அப்பக்கம் முட்கள் நிறைந்த புதர். நல்லகாலமாக ஹாஷிம் ஒரு காயமுமின்றி தப்பித்தான். இதுதான் அவன் செய்த நிஜமான ஸ்டன்ட் வேலை என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை!

இன்னொரு ஸினிமா சம்பவம் உண்மையாகவே எதிர்பாராதபடி சிக்கிக்கொண்டது. ஒரு பிளஷர் காற்றோடு பறந்து வந்தது; முறிந்து விழுந்த அக்கிளையால் தாக்கப்பட்டு நிற்கவேண்டியதாயிற்று. சில நிமிடங்களில் முன் காரைத் துரத்திவந்த இன்னொரு காரும் அங்கு வந்து சேர்ந்தது. முதல் காரில் வந்தவரின் முகம் சவம் போல வெளுத்தது; பின்னால் வந்த மூவரின் முகங்களும்—ஒருவர் கண்ணியமான மனிதர்; மற்றவர் ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர்; மூன்றாவது ஆசாமி ஒரு கான்ஸ்டபிள்—மகிழ்ச்சியால் ஜ்வலித்தன. பின், இருக்காதா வீட்டிலிருந்து சாமர்த்தியமாகத் திருடி வந்த பதினேந்தாயிரம் ரூபாய் பெறுமான நகைகளை களவும்

கையுமாகப் பிடித்துவிட்ட பொழுது? போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு ப்ரமோஷனும், நன் மதிப்பும் கிடைக்கும். மற்றவருக்குத் திருட்டுபோன சொத்து கிடைத்தது.

இவ்வளவும் ஹாஷிமால்தான் என்பதை அம்மூவரும் நன்ருக அறிந்து கொண்டார்கள். மூவரும் ஒரு மணி நோத்திற்கு முன் அப்பாதையின் வழியாகச் சென்றவர்கள் பாதை சுத்தமாக இருப்பதைப் பார்த்திருந்தார்கள். அச்சிறுவன்தான் மரத்தில் ஏறி விளையாடிக் குதித்து கிளையை ஒடித்துக் குறுக்கே போட்டிருக்க வேண்டும்.........

கைம்மாருக அச்சிறுவனுக்கு வெகுமதிகொடுக்க நினைத்தார்கள். அவன் தந்தையையும் பாராட்டலாம் என்பது அவர்களெண்ணம்.

ஆனல் ஹாஷிம் அங்கே இல்லை. பயத்தால் அவன் ஓடிவிடவில்லை. இன்னும் பாக்கியாக அவனுக்கு எவ்வளவோ ஸினிமா ஆக்ட் இருக்கின்றது. ஆனல் ஆறரை மணிக்கு மேலிருக்கலாகாது என்பது அம்மா ஜானின் உத்திரவு அல்லவா?

பாவம்! அந்த ஏழைக்குடும்பத்துக்குக் கிடைக்க இருந்த அதிருஷ்டப் பாதையின் நடுவே ஒரு நொடி!

சி. எம். சாமி

மன்மத குளிகை

மிருந்த பலத்தையும்
வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது. இதற்கு நிகரான தாதுபுஷ்டி ஔடதம் வேறில்லை.

ஒரே குளிகையில் பரிக்ஷிக்கலாம்.

இழந்த ஆண்மையும் பலமும் திரும்ப வரும். ஜீரணம், ரத்த விருத்தி, இந்திரியக் கட்டு, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கியாட்லாக்கிற்கு எழுதுங்கள்.

60-குளிகை விலை ரூ. 5—0—0.
20-குளிகை விலை ரூ. 2—0—0.

தலைமை ஆபீஸ்:—மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

பிராஞ்சு:—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 143, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.

குமுதம்

(வி. எஸ். மணியன்)

போன வருடம் வைகாசி மாதத்தில் தஞ்சாவூரில் எனது மைத்துனன் பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தது. அதற்குப் போயிருந்தேன் நான். கல்யாணத்திற்கு சிவராமய்யரும் வந்திருந்தார். நாங்களிருவரும் அகஸ்மாத்தாக சந்திக்க அந்தக் கல்யாணம் காரணமாயிருந்தது. பிறகு இருவரும் ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டோம்.

கல்யாணம் நடந்தது.

அன்று மாலை சிவராமய்யருடன் அவர் வீட்டிற்குச் சென்றேன். வெகு நேரம் வரை நாங்கள் பழைய நாளைய சம்பவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு அவரை நான் 'உமது குழந்தைகளுக்கெல்லாம் கல்யாணம் ஆகி விட்டதா?' என்று விசாரித்தேன். அவர் முகம் உடனே விகாரமடைந்தது. நான் அவரை என்னவென்று பலமுறை விசாரித்த பிறகு அவர் சொன்னார்.

"பரமசிவா, எனக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் இருக்கிறது. பெண்ணை இப்போதுதான் நான்கு வருஷங்களுக்கு முன்னால் கலியாணம் செய்து கொடுத்தேன். பிள்ளையின் கதைதான் பெரிய கதை. என் பிள்ளையின் பெயர் ராமச்சந்திரன். சந்திரன் என்றும் அழைப்போம். அவன் நல்ல கெட்டிக்காரன். அதனால்தான் அவனை பி. ஏ. வரையில் படிக்க வைத்தேன். பிறகு அவன் வேலைக்குப் போகப் பிரயத்தனப்பட்டான். எவ்வளவோ கம்பெனிகளுக்கு மனுப் போட்டான். எத்தனையோ கம்பெனி மானேஜர்களை நேரிலும் போய்ப் பார்த்தான். ஒன்றும் பலனளிக்கவில்லை.

இப்படியிருக்கும்போதுதான் என் குடும்பத்தைச் சிதைக்க ஒரு மகானுபாவர் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடி வந்தார். வீணை அவரைச் சொல்வதில் பலனில்லை. எல்லாம் விதி! அவர் ஒரு உத்தியோகஸ்தர். எங்கிருந்தோ மாற்றலாகி அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். அவரால்தான் என் பிள்ளை கெட்டழிந்தான்.

அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் குமுதம். அந்தப் பெண் நல்ல அழகுள்ளவளாகத்தான் இருந்தாள். ஆனால் அவளுடைய அழகே என் பிள்ளை சந்திரனுக்குச் சத்துருவாக இருந்தது. அவர்கள் அந்த ஊருக்கு வந்த ஒரு இரண்டு மாதங்கள் வரை சந்திரனிடம் எதும் மாறுதலேற்படவில்லை. அவன் அவளைத் திரும்பியும் பாராமலிருந்தான். ஆனால் நாளாவட்டத்தில் அவன் அவளுடைய அழகுக்கு அடிமைப்பட்டு அவள் வலையில் மாட்டிக் கொண்டான். அந்தப் பெண் அடிக்கடி அவர்கள் வீட்டு ஜன்னலண்டை வந்து உட்கார்ந்து கொள்ளும். இதை நான் எத்தனையோ முறை கவனித்திருக்கிறேன். அவர்களிருவரும் தத்தம் கண்களாலேயே பேசிக்கொண்டனர். நாளடைவில் அவர்கள் காதல் வளர்ந்து வந்தது. அப்போதெல்லாம் நான் அவர்களுக்குத் தடையாக எதும் செய்ய விரும்பவில்லை. ஒன்றுமறியாதவன் போலிருந்து விட்டேன்.

மூன்று மாதங்கள் மறைந்தன. சந்திரன் மெள்ள குமுதத்தின் வீட்டிற்குப் போகவும் தலைப்பட்டான். அதற்கு அவனுக்கு ஒரு சாக்கு அகப்பட்டது. ராமசுவாமி ஐயர்—குமுதத்தின் தகப்பனார், பேப்பர் வரவழைத்துக் கொண்டிருந்தார். சந்திரனுக்கு பேப்பர் படிக்க வேண்டுமென்று தோன்றி விட்டது! அதுமுதல் அவர்கள் வீட்டிற்குப் போய் வரவும் தவறுவதில்லை அவன். அவர்கள் வீட்டில் ஒருவரும் இல்லாத போது சந்திரன் எத்தனை முறை அப் பெண்ணிடம் தனித்துப் பேசியிருக்கிறானோ நான் அறியேன். அவர்களிருவரும் தனித்துப்பேசி யிருக்கிறார்கள் என்பது மட்டில் நிச்சயம். இப்படியிருக்கையில் குமுதமும் என் பெண் சாசுவதியை சிநேகம் செய்துகொண்டு விட்டாள். அந்தக் காரணத்தால் அவளும் எங்கள் வீட்டிற்கு வருவதற்கு இடமிருந்தது. நாங்கள் இல்லாத சமயங்களில் அநேகமாக சந்திரனும் குமுதமும் வீட்டிலிருப்பார்களென்பது நிச்சயம்.

இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந்தன. ஒரு நாள் இவர்களின் அன்புப் பிணைப்பைத் தகர்க்க முடியாதென நான் நிதர்சனமாய்க் கண்டு கொண்டேன். அவர்களுக்குள் கடிதப்போக்கு வரவு ஏற்பட்டிருந்ததானது, எனக்கு இத்தகைய எண்ணத்தை உண்டு பண்ணிற்று. இதிலிருந்து நான் இவர்கள் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலிக்கிறார்கள் என்று அறிந்துகொண்டேன். சதிபதி பொருத்தமும் சரியாயிருக்கிறதென்று நினைத்து மகிழ்ச்சி கொண்டேன். ராமசுவாமி ஐயர் தன் பெண்ணின் கல்யாணப்பேச்சை எப்பொழுது எடுப்பார் என்று எதிர் பார்த்திருந்தேன்.

நான் எதிர்பார்த்த சந்தர்ப்பமும் சீக்கிரமே வந்தது! ஆம்; ஒரு நாள் ராமசுவாமிஐயர் குமுதத்தின் ஜாதகத்தைக் கொடுத்துவிட்டு சந்திரனின் ஜாதகத்தை வாங்கிப் போனார். எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. சந்திரனுக்கும் ஜாதகம் வந்திருப்பது தெரிந்து சந்தோஷமுண்டாயிற்று. கல்யாணத்தை எப்படி எப்படி நடத்த வேண்டுமென்று மனக் கோட்டைகள் கட்டினேன்.

ஆனால்?

ஐயோ! என் மனக்கோட்டையெல்லாம் தகர்ந்து விட்டது!

என் மனம் ரொம்பவும் கஷ்டப்பட்டது. அந்த இளங் குழந்தைகளின் பிணைப்பை அறுத்துவிட வேண்டும்! அவர்கள் மனம் அதற்கு சம்மதிக்குமோ?

இப்படியெல்லாம் எண்ணித் துக்கப் பட்டேன். ஏன் தெரியுமா? இரண்டு ஜாதகங்களும் பொருந்தவில்லை! அத்துடனில்லை. ஜோஸியர் இரண்டு ஜாதகர்களையும் சம்பந்தப்படுத்தினால் பெருத்த விபரீதம் உண்டாகும் என்று சொல்லிவிட்டார். இரண்டு நாட்களுக் கெல்லாம் ராமசுவாமி ஐயரும் வந்து அப்படியே சொல்லி விட்டார். என்ன செய்வது? எனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதமேயில்லை. ராமசுவாமி ஐயருக்கும் அப்படியே. நாங்களிருவரும் கொஞ்சம் ஜாதகப் பித்தர்கள் என்பதுதான் இதற்குக் காரணம்.

ஆகவே அவர்களிருவரையும் பிரிப்பதைத் தவிர செய்யக் கூடிய காரியம் வேறொன்றுமில்லை !யென்று தீர்மானித்தேன்.

ஆனால் அவர்களிடையே அப்போதுதான் அதிக அன்பு தழைத்திருந்தது! காதல் பிணைப்பால் கட்டுண்டிருந்தனர். ஜாதகம் பார்க்கும் அளவில் வந்து விட்டதால் அவர்கள் முன்னை விட அதிக உற்சாகத்துடனிருந்தனர்.

சந்திரனை நான் ஜாடையாக எச்சரிக்க ஆரம்பித்தேன். ஜாதகம் சரியாயில்லை யென்ற விஷயம் சந்திரனுக்கும், குமுதத்திற்கும் எட்டியது போலும். அவர்கள் மனம் என்னபாடு பட்டிருக்கு மெனச் சொல்வது சாத்தியமல்ல.

நான் சந்திரனிடம் அந்தப் பெண்ணை மறந்து விடும்படி கூறினேன். அவன் இதற்குச் செவி சாய்ப்பானா ?

நாட்கள் மின்னல் போல ஓடி மறைந்தன. பகிரங்கமாக நான் பல முறையும் சந்திரனிடம் அப்பெண்ணை நினைக்காதே என்று சொல்லிச் சென்னையில் போய் ஏதாவது உத்தியோகத்திற்கு முயற்சி செய்யும்படி கூறினேன். இவளை விட வேறு அழகான பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவன், 'அப்பா, அந்தப் பேச்செல்லாம் வீண். மணந்தால் குமுதத்தைத் தான் மணப்பேன். இல்லையோ, வேறு பெண்கள் எனக்குத் தேவையில்லை' என்று கண்டிப்பாய்த் தெரிவித்து விட்டான்.

நான் என்ன செய்ய முடியும்? குமுதத்தை அவள் தகப்பனார் வேறொரு பையனுக்குக் கொடுக்க நிச்சயித்து விட்டார். அப்போது அந்தப் பெண் என்ன பாடு பட்டிருக்கும்? பாவம், கஷ்டம்; ஜாதகங்கள் சரியாக இருக்கக் கூடாதா? கல்யாணத்திற்கு முகூர்த்தம் குறித்தாய் விட்டது. சந்திரன் என்னை வந்து கெஞ்சினான். "அப்பா அவளை எனக்கு மணம் செய்துவை. உனக்குக் கோடி புண்ணியம்,'' என்று காலில் விழுந்தான். என் மனம் உடைந்து போயிற்று. எனக்கு ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. போனால் போகிற தென்று பார்த்தாலும் ராமசுவாமி ஐயர் சம்மதிக்க மாட்டாரே! நான் அவனைத் தேற்றி, "அப்பா நாம் என்ன செய்யலாம்? ராமசுவாமி ஐயர் சம்மதிக்கவே மாட்டார். அவர் ஜாதகப் பைத்தியம். நீ பேசாமலிரு" என்று சொன்னேன். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. ராமசுவாமி ஐயரையும் போய்க் கேட்டானோ என்னவோ. அவன் ஆத்திரம் அதிகரித்தது.

முகூர்த்தம் மறுநாள் நடக்கவிருந்தது. சந்திரன் ஒரு சபதம் செய்தான். "என் கண்கள் முன்னால் என் காதலி குமுதத்துக்கு நாளை விவாஹம் நடப்பதை நான் காணச் சகியேன். இனி இந்த ஜென்மத்தில் நான் வேறொரு பெண்ணை மணக்கப் போவதுமில்லை. இது சத்தியம்! நாளை இங்கிருந்து அவள் கழுத்தில் வேறொருவன் தாலி கட்டுவதை நான் பார்க்காமல் இன்றே எங்கேயாவது போய் விடுகிறேன்! என்னை ஒருவரும் தடுக்காதீர்கள்." என்று படபடப்புடன் கூறிவிட்டு அந்த நிமிஷமே வெளியே சென்றான்! அப்பொழுது இப் பாழும் உலகமே என் முன் வேகமாகச் சுழல்வது போல் இருந்தது. அன்று முதல் என் கண்மணி சந்திரனை இப்பாவி காணவில்லை. அதே ஏக்கத்துடன், இருக்கிறேன். என் சொந்த ஊரில் இருந்தால் என் ஏக்கம் அதிகமாகும் என்று உடனே தஞ்சாவூருக்கு வந்து விட்டேன். சந்திரனைப் பார்த்து இன்று சரியாக ஆறு வருடங்களாகின்றன! நண்பா, என் வாழ்வே எனக்கு ரஸிக்கவில்லை. கண்மணி சந்திரனைப் பார்த்து விட்டால்—ஒரே ஒரு முறை பார்த்துவிட்டால்—போதும்! நான் சாந்தியுடன் இறப்பேன். இனி அவனை நான் காணமுடியுமா?......" என்று கூறிக் கலகல வென்று கண்ணீரை உதிர்த்தார் சிவாமய்யர்! அவர் நிலைமை பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. என் துக்கத்தை அவருக்குக் காட்டிக் கொள்ளாதிருக்க, வேறுபக்கம் திரும்பி என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

அகஸ்தியரின் திகைப்பு

எஸ். கே. அருணாசலம்

திருநெல்வேலி ஜில்லாவில் மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில், தாம்பிரபரணி நதிக்கரையிலுள்ள பாபநாசம் என்ற க்ஷேத்திரத்திலிருந்து சுமார் 15 மைலுக்குத் தென்மேற்கில் தாம்பிரபரணி உற்பத்தியாகும்— 'ஐந்தலைப் பொதிகை' என்ற உயர்ந்த சிகரமிருக்கிறது. இங்கு தான் அகஸ்திய மா முனிவர் தவம் இயற்றிக் கொண்டிருக்கிறார். உலகத்தில் எத்தனையோ பெரிய பெரிய மலைகளெல்லாம் இருக்கும் போது இம்முனிவர் அவற்றை யெல்லாம் நீக்கி இவ்விடம் வந்து, தங்கியிருப்பதின் காரணம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன். அன்று பரமசிவனுக்கும், பார்வதிக்கும், கைலையில் திருக்கல்யாணம் நடந்தபோது அந்த வைபவத்தைக் காண வானுலகவாசிக ளெல்லாம் போய்க்கூடிவிடவே, பூமியின்வடபாரி சமானது பாரம் தாங்க முடியாமல் தணிய ஆரம்பித்தது. அப்போது பூமியை சமநிலைப் படுத்தி உலக மக்களைக் காப்பாற்றுவதற்கு, ஈஸ்வரன் அகஸ்தியரைத் தேர்ந்தெடுத்து பொதிகைக்கு அனுப்பினர். அவர் இங்கு வந்து சேர்ந்ததும் அவருடைய தவத்தினலோ, அல்லது கனத்திலோ பூமி சம நிலைக்கு வந்தது. எம்பெருமானின் கலியாணமும் எவ்வித ஆபத்துமின்றி நிறைவேறிற்று. இப்படிப் பொதிகையில் வந்து தங்கின அகஸ்தியருக்கு, வருணனும், வாயுவும், சூரியனும் தினம் மூன்றுவேளை தெளித்துப், பெருக்கி உலர்த்திக் கொண்டிருக்கிற படியால் யாதொரு இடைஞ்சலுமின்றி தவம் இயற்றிக் கொண்டிருக்க வசதியேற் பட்டிருந்தது.

ஆனல், இப்போது நமது மாகாண சர்க்கார் தாம்பிரபரணி நதியின் ஜல சக்தியிலிருந்து மின்சார உற்பத்தி செய்வதற்காக இந்தப் பொதிகை மலையின் சமீபத்தில், மேற்படி நதியில் பிரமாண்டமான அணை ஒன்று கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நவீன இயந்திர சாதனங்களால் மலைகளைத் தகர்த்து எறிகிறார்கள். சிலவருஷங்களுக்கு முன் மனிதப் போக்கு வரத்திற்கே லாயக்கில்லாமல், காடுகளும் மலைகளுமாக இருந்த இடங்களெல்லாம் இப்போது மேல்அணை கீழ் அணை என்ற திரு நாமங்களுடன் நகரங்கள் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான பேர்கள் அங்கே தங்கியிருந்து வேலை செய்கின்றனர்.

இந்த அணைவேலை நடந்து கொண்டிருப்பதைப் பார்த்துவரும் எண்ணத்துடன் சமீபத்தில் நான் சென்னையிலிருந்து அங்கு சென்றேன். பாபநாசம் அடைந்தபோது, சுமார் 500 வயோதிகர்கள் கைகளில் பனையோலைச் சுவடிகளை வைத்துக் கொண்டு, பொதிகையிலிருந்து சமபூமிக்குப் போடப் பட்டு, பாபநாசத்திற்கு அருகில் போகின்ற ரஸ்தாவைப் பார்த்த வண்ணமாக நின்று கொண்டிருந்தனர். சிலர் அண்மையிலுள்ள உயர்ந்த மரங்களிலும், ஆலயக் கோபுர உச்சியிலும் ஏறி உட்கார்ந்து ஏதோ ஒன்றை எட்டி, எட்டி எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்களுடைய செய்கை யிலிருந்து எனக்கு ஒன்றும் தீர்மானித்துக் கொள்ள முடியாமல் போனபடியால், அக்கூட்டத்திலிருந்து சற்றுவிலகித் தனிமையாக நின்ற ஒரு பெரியவரை அணுகி, "ஐயா, நீங்களெல்லாம் யார்? எதற்காக

இங்கு கூடி நிற்கிறீர்கள்? கோவிலில் ஏதாவது அன்ன கைங்கரியம் நடக்கப் போகிறதா?'' என்று கேட்டேன். அவர் என்னை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்துவிட்டு,'' நமக்கு எவ்விடம்?'' என்றார். அவருடைய பாஷை எனக்குப் புதிதா யிருந்த போதிலும், கேள்வியின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டேன். "ஐயா, எமக்கு சென்னை; மலையில் நடக்கும் அணைவேலையைக் கண்டு போக வந்தோம்'' என்று அவருடைய பாஷையிலேயே பதில் கூறினேன். அப்புறம் அவர், "இங்கு அன்னதானம், வஸ்திர தானமொன்று மில்லை. நாங்களெல்லாம் திருநெல்வேலி ஜில்லாவிலும், திருவனந்தபுரம் சமஸ்தானத்திலும் உள்ள சித்த—வைத்தியர்கள். தாங்கள் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னீர்களே, அந்த அணைவேலை ஆரம்பித்து சுமார் 3 வருஷங்கள் ஆகின்றன. அங்கு மலைகளை சுரங்க வெடிகள் வைத்துத் தகர்க்கும் போது உண்டாகும் சப்தமும், இரும்புக் குழாய்கள், இதர சாமான்கள் செய்யும் தொழில்சாலைகளி லுண்டாகும் இரைச்சலும், நூற்றுக்கணக்கில்வேலை செய்யும் கூலியாட்களின் பேரிரைச்சலும் இன்னும் இதுபோன்ற பலவிதக் கூச்சலும் சேர்ந்து வானத்தையே பிளந்து கொண்டு போய்விடும் போல் இருக்கிறது. இவ்வளவு சந்தடிக்கும் மத்தியில் அகஸ்தியரும், இதுவரை ஒரே நிலையிருந்து தவம்செய்துகொண்டிருந்தார். இனிமேல் அவரால் சகிக்க முடியாது. அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு தவம் புரிய வழியில்லாமல் என் இந்தக் குளிரில் கிடந்து சாகவேண்டுமென நினைத்து கைலைக்கே புறப்பட்டு விடுவதாக முடிவு செய்துவிட்டாராம். ஆகையால், கூடிய சீக்கிரம் அவர் மலையை விட்டிறங்கி இவ்வழியே தான் வருவார். அப்பொழுது, சித்த வைத்திய முறைகளில் சிலவற்றை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம், என்று நினைத்து அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார்.

இது எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தபடியால், திரும்பவும் அவரை நோக்கி, "ஆமாம், நீங்கள், இந்தவழியாக வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது அவர் ஆகாய மார்க்கமாகப் போய் விட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று ஒரு குருட்டுக் கேள்வியைக் கேட்டேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, "அப்படி ஒரு போதும் போய் விடமாட்டார். ஆகாயத்தில், நாரதரைப் போல் இவருக்குப் பறக்கவும் தெரியாது. தெரிந்திருந்தால் தான் அன்று கைலையிலிருந்து வரும் போது பறந்து வந்திருப்பாரே?'' என்று பதில் அளித்தார். அத்துடன் நான் அவரை விட்டு விடவில்லை. மறுபடியும், "ஐயா, அதிருக்கட்டும், அப்படியே அகஸ்தியர் பொதிகையிலிருந்து இறங்கி, உங்களுக்கு எதிர்ப்பட்டோ, எதிர்ப்படாமலோ கைலைக்கு ஏகுவாரானால், பூமியின் தென்பாகம் உயர்ந்துவிடுமே! அப்போது உங்கள் கதி என்ன? உலகத்தார் கதிதானென்ன? எல்லாம் அறிந்த முனிவர் உலக மக்களுக்கு அவ்வித விபத்து நேரிடும்படி நடந்து கொள்ள மாட்டார். ஈஸ்வரனுடைய 'ஸ்பெஷல் ஆர்டர்' இன்றி பொதிகையிலிருந்து இறங்கவும் மாட்டார். ஏன் பட்டினியும், பசியுமாய்க்கிடந்து சாகிறீர்கள்? ஊரை நோக்கிச் செல்லுங்கள்,'' என்றேன். அவர் சற்றுக் கோபத்துடன் "நீங்கள் பட்டணத்திலிருப்பதால் எல்லாம் தெரிந்தவர்போல் பேசுகிறீர்கள். இப்போது மேல் நாடுகளில் நடக்கும் யுத்தத்தில் லக்ஷக் கணக்கான பேர்கள் உயிர் இழந்திருப்பதால், ஏற்கெனவே பூமியின் வடபாகம், பாரம் குறைந்து தானே இருக்கிறது. ஆகையால், ஆகஸ்தியர் கைலைக்குப் போவதால் எவ்வித மாறுதலும் ஏற்படாது. அதையறிந்துதான், ஈஸ்வரனுடைய 'ஆர்

டரை' எதிர்பாராமலே அவர் புறப்படத் தயாராகி விட்டார்" என்று அழுத்தமாகக் கூறினார்.

இவ்விதமாகத் தகுந்த ஆதாரங்களுடன் அவர் சொன்னபோதுதான் எனக்கும் இவ்விஷயத்தில் நம்பிக்கையேற்பட்டு விட்டது. இப்போது நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வது யாதெனில், அகஸ்தியர், இன்னும் அதிகமான மழைகாலம் ஆரம்பிக்கும் முன் பொதிகையிலிருந்து நிச்சயமாகக் கிளம்பி வடக்கே வருவார். அவர் 'டிரங்க்ரோடு' மார்க்கமாக வருகிறாரா? அல்லது காட்டுப் பாதைகள் மார்க்கமாக வருகிறாரா? என்று எழுதவும் சொல்வதற்குமில்லை. ஆகையால் விழித்திருந்து கவனியுங்கள். ஆசாமி ஒரு கைப்பிடியளவு உயரம் தானிருப்பார். கையில் கமண்டலம் வைத்திருப்பார். தென்பட்டால், பின்னாலிருந்து கை கொட்டியாவது, சப்தம் போட்டாவது கூப்பிட்டால் பிரயோஜனமில்லை. சென்ற மூன்று வருஷகாலம் அவர் பேரிரைச்சலுக்குள் இருந்த படியால் காதுகள் மந்தமாகியிருக்கும். ஆனபடியால், எதிரில்போய் நின்று சைகை செய்து, உங்கள் குடும்பத்திற்கு வேண்டிய சில முக்கியமான வைத்தியமுறைகளையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். சமயத்தைத் தவற விடாதீர்கள்! மறு சமயம் வாய்ப்பதரிது!

தீபாவளி ராத்ரியன்று சித்தியடைந்தது

இந்த தாயத்தை வரவழைத்து, ராத்திரி தூங்குகிற சமயத்தில் தலைப் பக்கத்தில் படுத்துக்கொண்டு எந்த கேள்விக்குப் பதில் வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுகிறோமோ அதற்கு சுவப்னத்தில் சரியான பதில் கொடுக்கும். இதனால் களவு போன சாமான், புதையல் பொருள்கள் இருக்குமிடத்தைச் சொல்லும். அத்துடன் இறந்து போனவர்களுடனும் பேசலாம். இதை அணிந்து கொள்ளுவதால் உத்யோகப் பிராப்தி, கோர்ட்டு வழக்குகளில் ஜயம், லாட்டரிகளில் வெற்றி, பரீக்ஷைகளிலும் வெற்றி, நேசிப்பவர்களை அடையவும் பூர்ணமாக உதவி செய்யும். இதன் விலை ரூ. 1-4-0. தபால் கூலி அணா 0-5-0. பொய்யென்று ரூபித்தால் விலை வாபஸ். புருஷர்களுடைய குணங்களை கண்டறிய வேண்டுமானால் சக்தியுள்ள 5 நெ. கவசம் விலை ரூ. 3-15-0. இந்த கவசத்தை உபயோகப்படுத்துவதற்கு யாதொன்றும் தயார் செய்ய வேண்டியதில்லை, இதை அணிவதால் யாதொரு கஷ்டமும்நேரிடாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, (C.T.M.) JULLUNDUR CITY

ஒரே ஒரு மாதம் வரை — ஒரு கடிகாரம் ரூ. 6—0—0



நவீன அமைப்பும், அழகான வடிவும் கொண்ட கை கடியாரம் 6 வருடம் உத்திரவாதம் சரியான காலம் காட்டும். நல்ல குரோமியம் கேஸில் விலை ரூ. 6. ரோல்டு கோல்டு 10 வருடம் உத்தரவாதம். 6 ஜுவல் கொண்டது ரூ. 8. தபால் பாக்கிங் 10 அணா. 3 கடிகாரம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம். 6 கடியாரமாயிருந்தால் ஒரு கை கடியாரம் இனாம். வாங்கும் கடியாரத்தின் நம்பரைக் குறித்து எழுதவும். ஒரு வாரத்தில் சம்மதமில்லாவிடில் பணம் வாபஸ். காட்லாக் இனாம்.

CALCUTTA CLOCK Co., 15/1. Joymitter St, P. O. Hatkhola, Calcutta (I35A).

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி ஏன் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய **மாயக் கண்ணாடியின்** உதவியால் நீங்களே எஜமானாகி விடுவீர்கள். இந்த மாயக் கண்ணாடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகையைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சர்யமடைவீர்கள். நீங்கள் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானாலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி ஜோதிஷர் உதவியை நாடாமலே நடந்தவைகளையும், நடக்கப் போவதையும் கண்டறியலாம். இதைக்கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும் சிநேகிதர்களுடனும் கூட பேசலாம். உங்களுக்கு சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்க முடியும். இதை வைத்துக் கொண்டால், யுத்தத்தில் வெற்றி, வியாபாரம், கலியாணம் முதலியவைகளில் வெற்றியடையலாம். புதையல் இருக்குமிடத்தையும், கெட்டுப் போன சாமான்களும், அதிர்ஷ்ட நம்பர்களும் கண்டு பிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். **விலை ரூ. 2/4. ஸ்பெஷல் ரூ. 3/15.** போஸ்டேஜ் தனி. இன்றே ஒன்றுக்கு எழுதுங்கள். பர்மா, சிலோன் வாசிகள் முன்பணம் அனுப்ப வேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

Manager THE BENGAL MESMERISM HOUSE,
(CT) JULLUNDUR CITY.

பாப்பாப் பகுதி :

நாய் காட்டிய புதையல்

எம். எஸ். ஜி.

சுந்தரம் என்ற சிறுவன் நாய்க் குட்டி ஒன்றை வெகு பக்ஷமாய் வளர்த்து வந்தான். அந்த நாய்க் குட்டிக்குப் 'பட்டி' என்று பெயர் வைத்தான். அதற்கு சகல விதமான வித்தைகளைப் பயிற்சி செய்து பழக்கி வைத்திருந்தான்.

நாய்க் குட்டி, பெரிதாய் விட்டது. பட்டி பார்வைக்கு லக்ஷணமாய் இருக்கும். அந்த ஊரில் சிறு பிள்ளைகள்கூடப் பட்டியை அடிக்க மாட்டார்கள். பட்டி சுந்தரத்தைக் கண்டவுடன் ஓடிவந்து காலைப் பின்னிக் கொண்டும், மல்லாந்து படுத்துக் கொண்டும், வேஷ்டியைப் பல்லால் கடித்துக் கௌவி இழுத்துக் கொண்டும் இன்னும் பலவிதமான வேடிக்கைகளைச் சுந்தரத்திற்கு காண்பிக்கும். சுந்தரம் கடைக்குப் போகும்போது, பட்டி தூக்குக் கூடையை வாயில் கௌவிக் கொண்டு சுந்தரத்திற்கு முன்பு உல்லாசமாய்ப் போகும் காட்சியைப் பார்க்கும் அந்த ஊரில் உள்ளவர்களெல்லாம் பட்டி மீது ஆசைப் படுவார்கள். அதுதான் சுந்தரத்திற்குப் பொழுது போக்கும்.

பட்டி வாசலில்தான் இரவு நேரங்களில் படுத்துத் தூங்கும். அவ்வூரில் எந்தக் கள்வனும் களவாட முடியாது. ஏனென்றால், பட்டியின் கழுத்தில் கட்டித் தொங்கும் சலங்கை மணியோசையைக் கேட்டாலே நடுங்குவார்கள் கள்வர்கள்.

கொஞ்ச நாளைக்குப் பிறகு இங்கு ஒரு சம்பவம் நடந்தது. ஒரு நாள் இரவு அகஸ்மாத்தாய் சுந்தரம் வெளியே வந்தான். சுந்தரத்தைக் கண்ட பட்டி, எப்போதும் போல் அவனுடைய வேஷ்டியைக் கௌவிக்கொண்டு ஒரு பக்கம் பிடித்து இழுத்தது. சுந்தரத்திற்கு நாயின் செய்கை விளங்கவில்லை. "சீ" என்று முனகிக் கொண்டே ஒரு உதை விட்டான் தூக்கக் கலக்கத்தில்! என்றும் உதை வாங்காத நாய் அன்று உதை வாங்கியும் அதைப் பொருட் படுத்தாமல் திரும்பவும் பிடித்து இழுத்தது. "சரி, எங்குதான் இழுக்கிறது, போய்த்தான் பார்ப்போமே," என்று பட்டியைப் பின் தொடர்ந்தான். பட்டி சுந்தரத்திற்கு முன் போய் ஒரு குப்பை மேட்டைத் தன் இரு முன்னங்காலால் தன்னாலியன்ற வரை தோண்டியது. பிறகு சுந்தரம் அங்கு வந்து சேர்ந்தான். சுந்தரத்திற்குப் பட்டியின் செய்கை பிடிக்கவில்லை. வீட்டிற்குத் திரும்பினான். பட்டி அவனை வீட்டிற்கு விட்டபாடில்லை. "என்ன தான் குப்பை மேட்டுக்குள் இருக்கிறது பார்ப்போம்" என்று பட்டியுடன் சுந்தரமும் பங்கெடு

த்துக் கொண்டு மண்ணைக் கிளறினன். என்ன ஆச்சரியம்! சுந்தரத்தின் கையில் அதிர்ஷ்ட வசமாய் ஒரு செப்புக் குடம் அகப்பட்டது! சுந்தரம் முன்னை விடப் பன்மடங்கு ஊக்கத்துடன் விடா முயற்சியாய் நின்று அந்தக் குடத்தை வெளியில் எடுத்தான். அந்தக் குடத்தின் வாயில் பற்று வைக்கப்பட்டிருந்தது. அதை உடைத்துப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன், கருங்கல்லின் உதவி கொண்டு உடைத்துப் பார்த்தான் சுந்தரம். அதை உற்று நோக்கியவுடன், அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டான், கொஞ்சநேரம்.

சுந்தரம், பலவிதமான வயிர வைடூரியங்களும், மாணிக்க மரகதங்களும், விலைமதியாத பொருள்களும், பொன் வெள்ளி முதல் பல பஞ்சலோகங்களையெல்லாம் அக் காரிருளில், தன் கண் பூத்துப் போகும்படி பார்த்துக் கொண்டே யிருந்தான். பொழுது விடியும் சமயம், நாய் குறைத்தவுடன் சுயவுணர்வுற்று எழுந்து வானம் வெளுப்பதற்குள், அக்குடத்தை வீடு கொணர்ந்து சேர்த்தான்.

அதைக் கண்ணுற்ற அவன் தந்தை அளவு கடந்த ஆனந்த பரவசத்தில் மூழ்கினர். பிறகு, சுந்தரம் நடந்தவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவனை அறியாமல் அவன் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் சொட்டியது. அவர்கள் பட்டியை அன்புடன் வாரி அணைத்து நெற்றியில் முத்தமிட்டார்கள்.

அன்றையிலிருந்து பட்டிக்கு நல்ல உபசரணைகள் நடந்து வந்தன. அப்புதையல் பொருளை நேர்மையாகச் செலவு செய்து கொண்டும், நிலம், வீடு, தோட்டம், தோப்பு முதலியன வாங்கி ஏழை எளியவர்களுக்கு, தானதர்மம் செய்து கொண்டும் க்ஷேமமாக வாழ்ந்து வந்தார்கள். குழந்தைகளே! இதிலிருந்து நாய் நல்ல அறிவுள்ள பிராணி என்பது தெரிகிறதல்லவா!

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

I.D.L. 63. ஜிஞ்சிப் அஜீர்ண பித்த சமணி
ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடுபல்பொடி I.D.L. 51. மெடிகேடட்
I.D.L. 66. கூலாயில் சிறந்த ஸ்நான தைலம்

பல் உபாதைகளைக் கண்டிப்பதில் நிகரற்றது.

I.D.L. 27. கோனேரெக்ஸ் வெள்ளை, வெட்டை உபாதைகளுக்கு
I.D.L. 36. கோனேலாக்ஸ் மேக நோய்களில் ரத்த சுத்திக்கு பேதி
I.D.L. 54. கோனேசல்ப் (F) மேக உபாதைகளில் ரத்த சுத்தி டானிக்

உதவி வைத்தியர் டாக்டர் P. S. C. மணி

சோல் ஏஜண்ட்ஸ் :— யுனைடெட் கன்சர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.

மௌன ரகஸியம்

எஸ். சுப்ரமணியம், எம். ஏ.,

மிஸ்டர் ஹாமில்டன் வாயைத் திறந்தார். மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றியும், அதனாலுண்டாகக் கூடிய அனுகூல பிரதிகூலங்களையும் எடுத்துக்கூறி, பிரதிகூலங்களைவிட அனுகூலங்களே அதிகமிருப்பதால் மதுவிலக்குச் சட்டம் கொண்டுவர வேண்டியது அத்யாவசியம் என்பதைப் பொதுஜனங்களுக்கும், மற்ற பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கும் எடுத்துக் காண்பித்து அன்று வெளுத்து வாங்கிவிட்டார். ஜனங்களிடமிருந்து பலத்த கரகோஷம் ஏற்பட்டது. மிஸ்டர் ஹாமில்டன் பின்பு ஒரு புன்சிரிப்புடன் தன் ஆசனத்தில் அமர்ந்தார்.

பிறகு சபையும் கலைந்தது.

அன்று ஒருநாள் பேசினதிலேயே மிஸ்டர் ஹாமில்டனுக்கு அளவில்லாத புகழ் உண்டாகிவிட்டது. "ஆகா! எவ்வளவு வேகமாகப் பேசுகிறார்! எவ்வளவு அழகாகப் பேசுகிறார்! அன்று எத்தனை பழம் புலிகளெல்லாம் பேசினார்களே! அவ்வளவு பேரையும்விட மிஸ்டர் ஹாமில்டன் பேசியதுதான் மிகவும் நேர்த்தியாக இருந்தது. அன்றுதான் முதல் தடவையாகப் பேசினார். அந்த ஒரே பேச்சில் எல்லோரையும் தூக்கியடித்துவிட்டாரே. இன்னும் போகப் போக அவர் எப்படிப் பேசுவாரென்று கேட்க வேண்டுமா?" என்று ஜனங்களெல்லோரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ஊரெல்லாம் அவரைப் பற்றிய புகழ்ச்சிப் பேச்சுதான்.

அன்றைய தினத்திலிருந்து பார்லிமெண்டு சபையில் எதைப்பற்றி வாதம் நடந்தபோதிலும் சரி, ஜனங்கள் திரள் திரளாகப் போக ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு நாள் கல்வி மசோதாவைப் பற்றி பார்லிமெண்டு சபையில் விவாதம் எழுந்தது. மிஸ்டர் ஹாமில்டன் பேசுவார், பேசுவார் என்று எதிர் பார்த்துக் கடைசியில் ஜனங்கள் ஏமாந்து போய்த் திரும்பி வந்தார்கள். வரும் வழியிலேயே, "இவர்களெல்லோரும் பேசினார்களே. கொஞ்சங்கூட சுவாரஸ்யமாகவே யில்லை. மிஸ்டர் ஹாமில்டன் பேசியிருந்தால் எப்படிப் பேசியிருப்பார் தெரியுமா? ஏனோ அவர் சும்மா இருந்துவிட்டார்," என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள்.

இன்னொரு நாள் விவாக ரத்து மசோதாவைப் பற்றி விவாதம் நடந்தது. அன்றும் மிஸ்டர் ஹாமில்டன் பேசவில்லை. ஜனங்கள் அன்றும் ஏமாந்தவர்களாய்த் திரும்பி வந்தனர்.

"மிஸ்டர் ஹாமில்டன் அனாவசியமாக எழுந்து பேசுவதில்லை. ஆனால் ஏதாவதொன்றைப் பற்றி அவர் பேசினால் அவரை மிஞ்ச ஒருவராலும் முடியாது," என்று சொல்லிக் கொண்டார்கள்.

இப்படியாக சபை கூடும் ஒவ்வொரு தடவையும் மிஸ்டர் ஹாமில்டன் பேசுவார் என்று எதிர்பார்த்து ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். ஆனால் ஒவ்வொரு தடவையும் அவர் பேசாததைக் கண்டு ஏமாற்றமடைந்து வீடு திரும்புவார்கள்.

அன்று ஒருநாள் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிப் பேசினாரே, அதுதான் அவர் ஆயுளில் பேசிய ஒரே பேச்சு. அதற்கப்புறம் அவர் வாயைத் திறக்கவேயில்லை. மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிப் பேசின அன்று இரவு அவர், "நாம் இன்று ரொம்ப நன்றாகப் பேசினதாக ஜனங்களின் அபிப்பிராயம். நமக்கு இப்பொழுது நல்ல புகழ் கிடைத்திருக்கிறது. இதை நாம் முட்டாள்தனமாகக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்குச் சிறந்த வழி யென்னவென்றால் இனிமேல் எதைப்பற்றியும் பேசவேகூடாது. வாயைத் திறந்து மூச்சுகூட விடக்கூடாது," என்று தனக்குத் தானே தீர்மானம் செய்து கொண்டது ஜனங்களுக்கு எப்படித் தெரியும்?

[ஒரு உண்மைக் கதை.]

சந்திரோதயம்

வருஷ சந்தா

இலங்கை முதலிய
உள்நாடு ரூ. 2-0-0
வெளிநாடு ரூ. 4-0-0

ஆறுமாத சந்தா கிடையாது.

சந்தாத் தொகையை உள் நாட்டிலுள்ளோர், மணியார்டர் அல்லது போஸ்டலார்டர் மூலமும் வெளிநாட்டிலுள்ளோர் பிரிட்டிஷ் போஸ்டலார்டர் மூலமும் முன்பணமாக அனுப்ப வேண்டும். இலங்கையிலுள்ளோர் இலங்கை போஸ்டலார்டர் வாங்கி யனுப்பலாம். வி. பி. மூலம் அனுப்பப்பட மாட்டாது.

சந்தா மானேஜர்
சந்திரோதயம்
60, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

டோங்ரேயின் பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்

ஊர் சிரிக்க

எஸ். எம். பழனியப்பன்

ஸ்ரீமான் ராமமூர்த்தி ஐயர் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்; அவர் முகத்தைப் பார்த்தால் ஏதோ ஆழ்ந்த துக்கத்தில் இருப்பவர்போல் தோன்றிற்று. அவர் எதிரில் மேஜையின் மீது எழுதும் காகிதமும், பேனாவும், சில புத்தகங்களும், நோட்டுகளும், கிடந்தன. அவை ஒன்றும் ஒழுங்காக வைக்கப்படவில்லை. எல்லாம் ஒரே அல்லோலகல்லோல மாயிருந்தது.

மேஜையின் மேல் ஏதோ எழுதி வைத்திருந்த காகிதத்தை அவர் சட்டென்று கையிலெடுத்தார். ஒரு தடவை வாசித்தார். அவர் கண்களில் அனல் பறந்தது. அந்தக் காகிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்துக் கீழே போட்டார். ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்தார். சில பக்கங்களைப் புரட்டினார். அதை "டப்" என்று மூடி மேஜையின் மீது "தொப்" என்று போட்டார். மறுபடியும் இரண்டு கையாலும் தலையைப் பிடித்துக் கொண்டு சற்றுநேரம் ஆழ்ந்த சிந்தனையில் உட்கார்ந்திருந்தார்.

எதிரிலுள்ள சுவரில் ஒரு பல்லி 'டொக் டொக்' கென்று சத்தமிட்டது. ராமமூர்த்திஐயர் அதைப் பார்த்துவிட்டார். அவ்வளவுதான். மேஜையின் மேலிருந்த பென்ஸிலை எடுத்து அதன் மேல் எறிந்தார். பென்ஸில் பல்லியின் மேல் படவில்லை. சுவரில் பட்டுக் கீழே விழுந்தது. அதன் கூர் உடைந்து போயிற்று. பல்லி அடிக்குத் தப்பியதைக் கண்ட அவர் பல்லை நற நறவென்று கடித்தார். மேஜையின் டிராயரைப் பட்டென்று திறந்தார். அதிலிருந்து ஒரு கத்தியை எடுத்துப் பிரித்தார். கத்தி பள பள வென்று பிரகாசித்தது. "யாரது அங்கே? இப்படி வா!" என்று கூச்சலிட்டார். அவருடைய மனைவி லக்ஷிமி அம்மாள் பயந்து நடு நடுங்கிக் கொண்டே வந்தாள்.

"ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று மிக்க தீனமான குரலில் அவள் கேட்டாள்.

அவர் கத்தியை உள்ளங்கையில் தீட்டிய வண்ணம், "அதோ அந்தப் பென்ஸிலை எடு" என்றார். லக்ஷிமி அம்மாள் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"கீழே கிடக்கும் காகிதத்தை எல்லாம் எடுத்துக் குப்பைக் கூடையில் போடு" என்றார். அப்படியே பொறுக்கிப் போட்டாள்.

"சரி! போ! இங்கே நின்று தொந்தரவு கொடுக்காதே!" என்று சொல்லி விட்டு ராமமூர்த்திஐயர் எழுதத் தொடங்கினார்.

லக்ஷிமி அம்மாள் திரும்பி வாசற்படி தாண்டிப் போகையில் குழந்தை கோகிலம் அந்த அறைக்குள் நுழைந்தாள். "இங்கே வரக் கூடாது. வா! உள்ளேபோகலாம்" என்றாள் தாயார்.

"நான் அப்பா கிட்டப் போகிறேன், அம்மா!" என்றாள் கோகிலம்.

"கூடாது, கூடாது, அப்புறம் வரலாம். இப்பொழுது வேண்டாம், வா!" என்று லக்ஷிமிஅம்மாள் குழந்தை கையைப் பிடித்து இழுத்தாள்.

"இப்போது என் அம்மா, அப்பா கிட்டப் போகக் கூடாது?" என்று கோகிலம் கேட்டாள்.

"இப்போது அப்பா கோபமாயிருக்கிறார். நீ போய்த் தொந்தரவு செய்தால் அடிப்பார்.''

"என் அம்மா கோபம்? நான் என்ன செய்தேன் ?"

"நீ ஒன்றும் செய்யவில்லை. அப்பா காரிய மாயிருக்கிறார். காரியமாயிருக்கும்போது தொந்தரவு செய்தால் கோபம் வரும்.''

இந்த சமயத்தில் ராமமூர்த்தி ஐயர் அவர்களைக் கண்களில் தீப் பொறி பறக்கப் பார்த்தார். "சனியன்களே! மூதேவிகளே! தொலையுங்கள் சீக்கிரம்" என்றார்.

வாசற்படி தாண்டுகையில் கோகிலம் இரகசியமாக "அப்பா என்ன காரியம் செய்கிறார் அம்மா" என்று பயந்து கொண்டே கேட்டாள்.

"உனக்குச் சொன்னால் தெரியாது. பேசாமல் வா" என்றாள் லக்ஷிமியம்மாள்.

"இல்லையம்மா! சொன்னால் தான் வருவேன்" என்று கோகிலம் வாசற்படியில் உட்கார்ந்து விட்டாள்.

"அப்பா சந்திரோதயம் பத்திரிகைக்கு ஹாஸ்யக் கட்டுரை எழுதுகிறார்! அதனால் தான் இவ்வளவு கோபம்!" என்று கூறிக் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு லக்ஷிமிஅம்மாள் சயலறைக்கு விரைந்து சென்றாள்.

உள்ளே போனதும் குழந்தை மறுபடியும் "அம்மா! ஹாஸ்யக் கட்டுரை என்றால் என்ன?" என்று கேட்டாள்.

"படித்துச் சிரிக்கும் படியாக எதாவது எழுதினால் அதற்கு ஹாஸ்யக் கட்டுரை என்று பெயர்."

"யார் அம்மா படித்துச் சிரிப்பார்கள்?"

"ஊரில் எல்லாருந்தான் படித்துச் சிரிப்பார்கள்"

"என் அம்மா! அப்படியானால் ஊர் சிரிப்பதற்காக, அப்பா என் நம்பேரில் எரிந்து விழுகிறார்? அவரும் என் சிரிக்கக் கூடாது?"

"அப்பாவைத் தான் கேட்கவேண்டும்" என்றாள் லக்ஷிமி அம்மாள்.

கேம்பிரிட்ஜ் ஸீனியர் 1942

1942 டிஸம்பர் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீட்சைக்குரிய வகுப்பு ஆரம்பிக்கப்படவிருக்கிறது. 1943, 1944, 1945 எனும் இவ்வருடப் பரீட்சைகளுக்குரிய வகுப்புகளும் மும்முரமாக வேலை செய்கின்றன. S.S.L.C. யில் தோற்று, கலாசாலைப் பிரவேசனமின்றி நிராசையுடனிருப்பவர்களும், ஐந்தாவது பாரம் வரையிலும் கற்றவர்களும் 1942 பரீட்சை எழுதலாம். பாடசாலைகளில் இடையில் கல்வி நிறுத்தியவர்களும், ஸீனியர் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யப்படுகிறார்கள். ஏ. பி. ஸி. முதல் தொடங்கினாலும் முறையே கலாசாலைப் பிரவேசனம் பெறலாம். விபரங்களுக்கு, நாலணா ஸ்டாம்புடன்

கேம்பிரிட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்

எனும் விலாசத்திற்கெழுதவும்.

கீழ்க்கண்ட இடங்களில்

பொது அறிவுப் போட்டிக் கூபன்கள்

வேண்டுவோர் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1. ஸிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98, A, வாலாஜா ரோடு, மவுண்டு ரோட் மதறஸ்.
2. சகானந்த ஸ்டால், பெரியகடை வீதி கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்பகோன், 42, வடக்கு சித்திரை வீதி, மதுரை.
4. சாரதி நியூஸ் ஏஜன்ஸி, உறையூர்-திருச்சி.
5. கே. வேணுபிள்ளை, வடக்குரத வீதி, திருநெல்வேலி டவுன்.
6. டி.எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மானோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
7. டி. எஸ். வேணுகோபால், நியூஸ் ஏஜண்டு, மெயின் ரோடு, சேலம்.
8. என். சாரங்கபாணி, நியூஸ் ஏஜண்டு புதிய மார்க்கட் மாதுங்கா, பம்பாய் 19.
9. ஆனந்தா புக் டிப்போ, 2 & 3 நியூ மார்க்கட் ரோட், பெங்களூர் தண்டு.
10. த. தம்பித்துரை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
11. காமாக்ஷி செட்டியார் அண் சன்ஸ், சுல்தான் பேட்டை, பாலக்காடு.
12. R. K. ஷண்முக முதலியார், மார்க்கட்டு, வேலூர்.
13. ஜி. ராஜகோபால் பிள்ளை, ஜெனரல் மர்ச்செண்ட், கடை வீதி, மாயவரம்.
14. R. நாராயணசாமி ஆச்சாரியார், பாத்திர வியாபாரம், திண்டுக்கல்.
15. ரஹிம்ஸ் நியூஸ் மார்ட், நுவாரேலியா (Ceylon.)
16. M. O. முருகேசப் பிள்ளை, நாவலப்பிட்டியா, (Ceylon.)
17. தி நியூஸ் கார்ப்பொரேஷன், திருச்செங்கோடு.
18. K. M. முகம்மது தாவுத் சாகிப், மார்க்கெட் தெரு, விஜயபுரம்.
19. சி. கே. கணேசன், நேஷனல் நியூஸ் ஏஜன்ஸி, நாகர்கோயில்.
20. K. ஷண்முகசுந்திரம், c/o குமாரசாமி பிள்ளை, ஜவுளிக்கடை, [பொள்ளாச்சி.
21. D. T. சின்னசாமி, ஜெனரல் மர்ச்செண்டு, தர்மபுரி.
22. கதிரேசன் செட்டியார், தவசிப்புலியார் புது வீடு, தேவகோட்டை.
23. P. S. வெங்கட்டராமன், டபீர் கீழத் தெரு, கும்பகோணம்.
24. A. வேலாயுதம், புக் செல்லர், ஈரோடு.
25. K. V. சங்கபதி நாயுடு, நியூஸ் ஏஜண்டு, புதுத் தெரு, கரூர்.
26. R. நாராயணசாமி, தினமணி ஏஜண்டு, பாண்டிச்சேரி.
27. A. ஜேம்ஸ் ஆம்புரோஸ், T. E. L. C. ஸ்கூல், அபிராமம் (Ramnad.)
28. K. K. மகம்மது மீரா & சன்ஸ், நியூஸ் ஏஜண்டு, டிக்கோயா (Ceylon.)
29. செந்திலதிபன் புத்தகசாலை, காரைக்குடி.
30. K. A. M. P. மீரா சாயபு & பிரதர்ஸ், கண்டி (Ceylon.)
31. P. திருவண்ணாமலை, நியூஸ் ஏஜண்டு, உசிலம்பட்டி.
32. J. N. கோபாலகிருஷ்ண பிள்ளை, பெரம்பலூர்—திருச்சி.
33. V. S. சாஸ்திரி வைத்திலிங்கம் ஐயர், ஸ்ரீ வைகுண்டம்.
34. S. அமீர் அலி, மௌண்டன் நியூஸ் ஹால், உதகமண்டலம்.
35. A. பொன்னுசாமி பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, பழனி.
36. O. M. K. S. A. சிங்காரவேல் செட்டியார், போகவந்தலவா (Ceylon.)
37. N. ராமமூர்த்தி, நியூஸ் ஸ்டால், மேல வீதி, சிதம்பரம்.
38. நவஜீவன் நியூஸ் பேப்பர் ஸ்டோர்ஸ், போடிநாயக்கனூர்.

பிரவேசக் கட்டணம்

"பொது அறிவு"ப் போட்டிக்குக் கூபன் அனுப்பும் நேயர்கள், பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமோ, இந்தியன் போஸ்டலார்டர் மூலமோ அனுப்பலாம். ஒரு கூபன் மட்டும் அனுப்புவோர் மணியார்டர் செய்ய வேண்டியதில்லை. தபால் ஸ்டாம்பாக அனுப்பிவிடலாம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபால் ஸ்டாம்பு அனுப்பக்கூடாது. பிரிட்டிஷ் போஸ்டலார்டர் அனுப்ப வேண்டும். இலங்கைப் பகுதி நேயர்கள் இலங்கைப் போஸ்டலார்டர் வாங்கி அனுப்பலாம்.

போட்டியாசிரியர்,
"சந்திரோதயம்"
60, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

பொ. அ. போ. 98-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 98
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

பொ. அ. போ. 99-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 99
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

பொ. அ. போ. 100-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 100
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

சந்திரோதயம்

'பொது அறிவு'ப் போட்டி—100

பிரவேசக்கட்டணம் ஒரு கூபனுக்கு அணா 4.	முடிவு தேதி **24-12-1941**	ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை, ஸென்ட்ரல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டு பிடிக்க வேண்டிய விதம் :

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலிருந்தும் இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்பு கட்டத்தின் முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துதான் எழுதலாம்.

உதாரணமாக :—*முதற் குறிப்பு, (இடமிருந்து வலமுள்ளது) பொது அறிவுப் போட்டியின் ....விழாப் பரிசு ரூபா பதினையாயிரம் என்றிருக்கிறது.* வயிரம் *சரியான விடை. இவ்விதமே மற்ற விடைகளையும் கண்டு பிடிக்கவேண்டும்.*

மேலிருந்து கீழ் குறிப்பைப் பாருங்கள் :— வசதி *என்ற விடை சரியாக அமைகிறது.*

'பொது அறிவு'ப் போட்டி—100

1 வ	யி	2 ர	ம்	■	3 ம்	■	4	சி	■
ச	■		■	5 பி		6 கு	■	■	7
தி	■	■	8 தா	■	9 வீ		■	10	ழை
■	11 சு	12		13 சி	■	14 மு	15	டு	■
16 தொ		ல்	■	17	ன்		மை	■	18
வயிர விழாப் பரிசு			19 அ			■	■	20	ணி
21		22 தி		ம்	■	23 சா	24	■	■
	■		ரூ.15,000				25 த	26	■
	■	27 நா		ம்	■	28		ப	
29	ண்		■	■	30 ச		■		■

முடிவு தேதி 24—12—1941

